# *Volume - 3*

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

**இயேசுவோடே கூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்ட பொழுது,
அவரை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம் பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்.Luk_14:15,**

THE SCRIPTURE FEAST MINISTRIES

**REV: PAUL BENJAMIN**
FOUNDER AND AUTHOR

**REGD OFFICE:**
NO:104, EXTN 7 , MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM,
GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 .
TAMIL NADU, SOUTH INDIA .

Mobile : + 91 94456 35860

Email : info@scripturefeast.net, www: scripturefeast.net

**FOREWORD**

**PASTOR : A. THOMAS RAJ**

PRESIDENT, APOSTOLIC CHRISTIAN ASSEMBLY

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

1. பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலானவைகள்
2. பல ஆங்கில பதிப்பு வேதாகமத்துடன் ஒப்பிடக்கூடியவைகள்
3. தேவ நாமத்துடன் பல தேவ தரிசனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டவைகள்.
4. பெரிய மதங்களையும் அதன் உட்பிரிவுகளையும் உள்ளடக் கியவைகள்.
5. வேதத்தின் அடிப்படை உபதேசங்களை அஸ்திபாரமாகக் கொண்டவைகள்
6. மெய்யான தேவ ஞானத்தை எளிமையாக கற்றுக் கொள்ளும் வழி முறைகள்.
7. தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களுக்கு ஜெயங்கொள்ளு வதற்காக தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து.
8. வேதாகம மையக்கருத்துக்கள் அதன் இணையான தேவ வார்த்தைகளுடன் இரண்டறக் கலப்பவைகள்.




@ One among the 1000 generation
The Bride in 1000 years kingdom

# பொருளடக்கம்

# தலைப்பு மூன்று

# தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

1மதிப்புரை / Foreword
2 முன்னுரை
3 ஆசிரியர் உரை
4. ஏழு சபைகளுக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி
5. நியாயப்பிரமாண நீதியினுடைய இரட்சிப்பின் விசுவாசமும் கிரியைகளும்.
6. நீதிப்பிரமாண நீதியினுடைய இரட்சிப்பின் விசுவாசமும் கிரியைகளும்
7. ஆவி, ஆத்துமா, சரீரத்தின் மரணமும் உயிர்தெழுதலும்
8. தேவனுடைய இரட்சிப்பின் கிரியைகளை நியாயத்தீர்ப்பதற்காக மூன்று புஸ்தகங்கள் திறக்கப்படுகிறது.
9. கிறிஸ்துவின் முதலாம் வருகையில் தேவனுடைய இரட்சிப்பு ஆவிக்குரிய யூதர்கள் மூலமாக வெளிப்படுகிறது
10. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவனுடைய இரட்சிப்பு ஆவிக்குரிய யூதர்கள் மூலமாக வெளிப்படுகிறது
11 முடிவுரை

# மதிப்புரை / Foreword

*JESUS NEVER FAILS*
*"TO MAKE READY A PEOPLE PREPARED FOR THE LORD"*

## APOSTOLIC CHRISTIAN ASSEMBLY

'Speak evil no man (Titus 3:2)' (Regd.No. 80 of 1957) 'Follow peace with all men (Heb. 12.14)'

**Founder : Pastor G. SUNDRAM** **Chief Pastor : M.K.SAM SUNDARAM**

**Pastor . A. THOMASRAJ**
President

**G.SUKUMAR SAMUEL**
Hon.secretary

**K.R. SELWIN**
Treasurer

*The grass withers, the flower fades,*
*But the word of our God stands forever. " Isa. 40:8*

The Word of God is blameless, faultless, without defect, deserving no censure. And the Word of God has to be Preached to all People. All over the Earth with conviction and clarity for the edification of the hearers.

Careful study and meditation of the Scriptures when undertaken with the grace of God depending on the Holy Spirit's guidance will bring hidden truths to light.

The work and efforts of Bro. Paul Benjamin in this regard is commendable. I appreciate his passionate toil in the Lord's Kingdom. My prayers are that his teaching and writing will profit and prepare many for the coming of our Lord and savior Jesus Christ. Amen.

Pastor A. Thomasraj
President
Apostolic Christian Assembly

No. 26. Shanmugarayan Street, Purasawalkam, Chennai – 600 007. ☎ : 26622775/ 26635583
Email :- info@acapryaerhouse.org, Web site : www. acaprayerhouse.org

# முன்னுரை

மனிதன் மாம்ச சரீரத்தில் வாழ்வதற்கு அவனுக்கு காற்று, தண்ணீர், போஜனம், வஸ்திரம், குடியிருப்பு எப்படி ஒவ்வொருவருக்கும் அடிப்படை முக்கியமான தேவைகளோ; அது போலவே ஆவிக்குரிய மனிதன் வாழ்வதற்கு இந்த ஐந்து அடிப்படை தேவைகள் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய வார்த்தைகளின் மூலம் மிக முக்கியமானது. இவைகளை உள்ளான ஆவிக்குரிய மனிதனின் ஐந்து ஆவிக்குரிய அடிப்படை தேவைகளை; புறம்பான மனிதனின் ஐந்து அடிப்படை தேவைகளோடு ஒப்பிட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| மாம்ச சரீரத்தின் தேவைகள் | | ஆவிக்குரிய சரீரத்தின் தேவைகள் |
|---|---|---|
| ஜீவ சுவாசம் | 1 | பரிசுத்த ஆவி |
| தண்ணீர் | 2 | நித்திய ஜீவத்தண்ணீர் |
| போஜனம் | 3 | நித்திய ஜீவ வார்த்தைகளின் போஜனம் |
| வஸ்திரம் | 4 | நீதியின் வஸ்திரம் |
| குடியிருப்பு | 5 | பரலோக வாசஸ்தலம் |

இவைகளை உட்கொள்ளும் அளவு அவரவர் தன்மைக்கேற்றபடி மாறுபடுகிறது. இந்த ஐந்து தேவைகள் குறையும்போதோ, அல்லது தேவைப்படும் போதோ, சரீரமானது இவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது. எப்படி மாம்ச சரீரம் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறதோ, அது போலவே ஆவிக்குரிய சரீரமும் இவைகளை ஆவிக்குரிய நிலையில் அவரவர் தன்மைக்கேற்றபடி பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது.

மனச்சாட்சியை தேவன் மனிதனுக்கு கொடுத்து அதன் மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் அவன் தேவனுடன் ஆவியில்

தொடர்பு கொண்டு தன்னுடைய ஆத்துமாவின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம், மேலும் இவைகளுக்காக மனச்சாட்சியில் அறிவு, புத்தி, ஞானம் இவைகளை தேவன் மனிதனுக்கு அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். ஒருவன் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி நீண்ட தூரம் பயணம் செய்யவோ அல்லது மிக கடினமாக வேலை செய்யவோ தேவையில்லை. Rom_2:11-16

ஆத்துமாக்களின் பிதாவாகிய தேவன் மனிதனுக்கு மிக அருகிலும் மிக எளிமையாகவும் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி தேவ வார்த்தைகளை தேவன் நமது இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாக வைத்திருக்கிறார். Rom_10:5-10, Deu_30:11-14, Jer_23:23-24, Act_17:24-28,Rom_1:19-20

மனச்சாட்சியில் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்வது பொதுவான இரட்சிப்பு, மேலும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை ஏற்றுக் கொள்வது விசேஷ இரட்சிப்பு. 2Pe_1:1, Jud_1:3, Eph_1:1, 1Pe_1:1, Tit_1:1,

**விசேஷ இரட்சிப்பின் ஆவிக்குரிய நிலமைகள்**

1. ஜலத்தினால் மறுபடியும் பிறப்பு :-
தேவனுடைய வார்த்தைகளினால் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தை விசுவாசக் கண்களால் பார்ப்பது. Joh_3:3

2. ஆவியினால் மறுபடியும் பிறப்பு :-
தேவனுடைய வார்த்தைகளினாலும் பரிசுத்த ஆவியினாலும் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே விசுவாசக் கண்களால் பிரவேசிப்பது. Joh_3:5,

3. மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்:- 1Pe_2:2-3, மறுபடியும் பிறந்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களில்

வளர்ச்சியடைய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்.

4. பலமான ஆகாரம் :- Heb_5:12-14, தீமையை வெறுத்து, நன் மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைந்து நீதியின் வசனத்தை பகுத்தறியும் ஞானத்தை அடைதல்.

5. பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் :- Mat_13:10-15, உவமைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவதினால் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித் தத்தை / பங்களிப்பை அறிந்து கொள்ளுதல்.

6. தங்களுடைய விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன் னேறும் போது அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவனுடைய சித் தத்தையும் அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல் Rev_3:20-22

7. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து :- Rev_19:1-9 இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழா வில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தியமான வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சியின் பதவியை பரிசாகப்பெற்று, அல்லேலூயா என்று கெம்பீர சத்தத்தோடு ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துதல்.

8. மரணத்தை ஜெயமாக விழுங்குதல் :- 1Co_15:50-54, 1Co_11:23-30, Joh_6:27-28 தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து அதன் கிரியைகளின் மூலம் அழிவுள்ளது அழியாமை யையும் சாவுள்ளது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.

பொதுவான இரட்சிப்பும் மற்றும் விசேஷ இரட்சிப்பின் வளர்ச்சிப் படிகளும் மிக எளிமையான முறையில் தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டு புரிந்து கொள்

ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபை யினால் இந்த தேவனுடைய சத்தியமான வசனங்களின் விருந்தை பல ஆங்கில மொழிப் பதிப்பு வேதாகமங்களுடனும் மற்றும் அவரவா் சொந்த தாய்மொழி வேதாகமங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்க்க தரிசன வசனங்களின்படி ஜலத்தினால் சமுத்திரம் நிறைந்திருப்பது போல பூமி கர்த்தரைக் குறித்து அறிகிற அறிவால் நிறைந்திருக்கும் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். Hab_2:14, Isa_11:9

இந்த தீர்க்க தரிசன வசனத்தின் படி இந்த வசனங்களை வாசிக்கிறவன், கேட்கிறவன் இதில் எழுதியுள்ளவற்றை கைக்கொள்கிறவன் பாக்கியவான். இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி ஏற்கனவே உங் களுக்கு அறிவிக்கப்பட்ட தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டே மீண்டும் இவைகள் இப்பொழுது; பத்து தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் விவரிக்கப்பட்டு, உங்களுக்கு அறிவிக் கப்பட்டு வருகிறது. Rev_1:3. 1Pe_1:10-13

இந்த தீர்க்கதரிசன வசனத்தின்படி பொதுவான இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் எழுதும்போது, பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைக்குறித்து எழுதுவது நலமாக கண்டது இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி தங்களது பெயர் பூமியில் எழுதப்படாமலும், ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்ட பெயர் அழிக்கப்படாமலும், ஞாபக புஸ்தகத்தில் பெயர் எழுதப்படும் படியாகவும் இவைகளை மீண்டும் ஞாபகப் படுத்திக்கொள்வோம் ஆமென்.
Jud_1:3, Jer_17:13,Exo_32:33, Psa_69:28, Mal_3:16,

# ஆசிரியர் உரை

மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் இராஜாவாக வெளிப் படப்போகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் உள்ள விசுவாசத்தில் தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைத்து, அவருடன் விசுவாச உடன்படிக்கை செய்து, அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அவர் இராஜாவாக முடிசூட்டப்படும் தன்னுடைய பட்டாபிஷேக விழாவிற்கு அழைத்து அவர்களுக்கு தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாகக் கொடுத்து, அவர்களின் கிரியை களின்படி பிரதிபலனை பரிசாக அளிக்கிறார்.

இந்த நற்செய்தியை தேவனுடைய தரிசனமாகவும், அழைப் பிதழாகவும் எழுதி அனுப்பி இதன் பயனாக தேவனால் முன் குறிக் கப்பட்ட பரிசுத்தவான்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை செய்கிறவர்களாக, இந்த தலைமுறையில் எழும்பும்படி நாங்கள் தரிசனம் நிறைவேற ஜெபத்துடன் ஊழியம் செய்து கொண்டு வருகிறோம். தேவ வார்த்தைகளை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்டபடியால்; தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவின்படி தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மனம் புதிதாகிற தினாலே ஆவியில் மறுரூபம் அடைந்து தேவ தரிசனத்தைப் பெற்றேன்.

**தரிசனம் :-** கர்த்தர் எனக்கு பிரதியுத்திரமாக : நீ தரிசனத்தை எழுதி, அதை கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகையிலே தீர்க்க மாக வரை.

**எழுத்தின்படி பொருள் :-** காகிதம், தோல்சுருள், கற்பலகை உலோகத்தினாலான பலகை இவைகளில் தேவ தரிசரினத்தை எழுதி அறிவிப்பது.

**ஆவியின்படி பொருள் :-** தேவ வார்த்தைகளை வாசிப்பது, கேட்பது, ஆலோசனையாக ஏற்றுக்கொள்வது, விசேஷ பயிற்சிகளினால் உணர்ந்து கொள்ளுவது ஆகியவற்றின் மூலம் சதையாகிய இருதயப்பலகையின் மேல் தேவ தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

**ஞான அர்த்தத்தின்படி பொருள் :-** கணினியின் கடந்தோடுகிற திரையில் தரிசனத்தை வாசிக்கும்படி கணினியின் விசைப்பலகையிலே தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

தரிசனத்தை மிக சுருக்கமாகவும், வெளிப்படையாகவும், வேதத்தில் உள்ளபடி அவரவர் கேட்டறியும் அளவிற்கேற்றபடி எழுதி, அவைகளை எழுத்தின்படி, ஆவியின் படி, ஞான அர்த்தத்தின்படி ஆகிய மூன்று வழிகளிலும் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தில் பங்கடையும்படி அழைப் பிதழ்களை அனுப்பும் இந்த ஊழியத்திற்காக தேவைகள் அநேகம் உண்டு.

இப்படிப்பட்ட பல கிருபை வரங்கள், ஊழியதரிசனங்கள் மற்றும் பல ஆசீர்வாதங்கள், தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்துவின் அவயவங்களான நமக்கு தேவ ஆவியானவர் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்.

கிறிஸ்துவாகிய தலையைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவின் அவயவமான எங்கள் ஊழியம் அதன் முழு பெலத்துடன் பொருளாதார ஆசீர்வாதங்களை பெற்று செயல்பட முயற்சி செய்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற கிறிஸ்துவின் அவயவங்களான நீங்களும் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல எங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தேவன் பகிர்ந்து கொடுத்த சித்தத்தை நிறைவேற்றும்படி கிறிஸ்துவின் அவயங்களை இசைவாகக்கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவிற்குத்தக்கதாக கிரியைகளை செய்யும் போது; அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாகு வதற்கேதுவான முழு சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. இப்படி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறை வேற்றி தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம்.

அல்லேலூயா, ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
உங்கள் சகோதரன்

## அத்தியாயம் ஒன்று

ஏழு சபைகளுக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

1-1 முதல் சபை - எபேசு பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

1-2 இரண்டாம் சபை - சிமர்னா பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

1-3 மூன்றாம் சபை - பெர்கமு பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

1-4 நான்காம் சபை - தியத்திரா பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

1-5 ஐந்தாம் சபை - சர்தை பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

1-6 ஆறாம் சபை - பிலதெல்பியா பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

1-7 ஏழாம் சபை - லவோதிக்கேயா பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

1-1முதல் சபை - எபேசு பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

Rev 2:1) Rev_2:1

ஏழு நட்சத்திரங்கள் - ஏழு சபையின் தூதர்கள்.

1. கிறிஸ்துவின் வசனம் இருளில் பிரகாசிக்கிற விடி வெள்ளி நட்சத்திரம் - கிறிஸ்துவின் வசனம் ஏழு சபைகளுக்கும் இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்கும் தூதர்கள். Rev_1:20, Rev_1:12-13, Rev_1:16

2. ஏழு பொன் குத்து விளக்கு - ஏழுபட்டணத்து சபைகளின் மத்தியில் உலாவிக் கொண்டிருந்து, ஏழு சபைகளுக்கும் தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்கிற கிறிஸ்துவின் வசனம் சொல்லுகிறதாவது. 2Pe_1:19, Joh_1:1-5,

Rev 2:2-3) Rev_2:2-3

இந்த வசனங்களில் சொல்லப்படுகிற கீழே குறிப்பிட்ட எட்டுவகையான காரியங்களை தேவன் அறிந்திருக்கிறார்.

1. உன் கிரியைகளையும் - வெளிப்பட்ட கிரியைகளையும்

2. பிரயாசத்தையும் - செய்ய நினைக்கிறவைகளையும்

3. பொறுமையையும் - பொறுமையாக இருந்ததையும்

4. பொல்லாதவர்களை சகிக்காமல் - பொல்லதாவர்களை பொறுத்துக்கொள்ளாமல்

5. கள்ள அப்போஸ்தலர்களையும் அவர்களுடைய பொய் களையும், யூதர்களுக்கு அப்போஸ்தலனா? அல்லது புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனா? யாருக்கு அப்போஸ்தலன்? என்று உணர்ந்து கொள்ளாமல் தன்னைத்தான் அப்போஸ்தலன் என்று சொல்லுகிற கள்ள அப்போஸ்தலர்களையும் 2Co_11:12-15, Gal_2:7-8,

6. துன்பம் / கஷ்டம் சகித்துக் கொண்டிருப்பதையும்

7. பொறுமையாக இருந்து கொண்டிருப்பதையும்

8. தேவனுடைய நாமத்தின் நிமித்தம் சோர்ந்து போகமல் முயற்சி செய்கிறதையும் தேவன் அறிந்திருக்கிறார்.

Rev 2:4) Rev_2:4,

ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் தேவனுக்கு குறை உண்டு Jer_2:1-2, Jer_2:4-6,

Rev_2:2-3 வசனங்களில் சொல்லப்பட்ட எட்டு வகையான நன்மையான காரியங்களை உன்னிடம் இருந்தாலும், நீ இரட்சிக்கப்பட்ட போது உன்னிடம் ஆதியில் இருந்த அன்பு இப்பொழுது உன்னிடம் இல்லை, ஆதியில் இருந்த அன்பை மறந்து போனாய்.

Rev 2:5)Rev_ 2:5,

1 நீ இரட்சிக்கப்பட்டபோது உனக்கு இருந்த அன்பிலிருந்து, நீ இப்பொழுது எந்த அளவிற்கு கீழே விழுந்திருக்கிறாய் என்பதை நினைத்து மனத்திரும்பி; உன் இளவயதின் பக்திக்கும், நீ இரட்சிப்பின் உடன்படிக்கை செய்த போது உனக்கு இருந்த நேசத்திற்கும் மீண்டும் திரும்புவாயாக.

2 நீ மனந்திரும்பாமல் இருந்தால் உன் விளக்கிலிருந்து விளக்கு தண்டை தேவன் நீக்கிப் போடுகிறார் இப்பொழுது உன் விளக்கு தரையில் வைக்கப்படுகிறபடியால் மற்றவர்களுக்கு விளக்கு வெளிச்சம் தடை செய்யப்பட்டு உனக்கு மட்டும் உன் விளக்கு வெளிச்சம் பிரகாசிக்கிறது.

**ஆவியின் படி பொருள்:-**

நீ மனந்திரும்பாமல் இருந்தால் உன் நற்கிரியைகளை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் வழி முறைகளை / ஊழியத்தின் எல்லைகளை தேவன் தடை செய்கிறார் இப்பொழுது உன் நற்கிரியை களின் எல்லைகள் / ஊழியத்தின் எல்லைகள் குறைக்கப்பட்டு, உன் நற்கிரியைகள் மற்றவர்களுக்கு வெளிப்படாமல் உனக்கு மட்டும் வெளிப்படுகிறபடியால் உனக்கு நீயே ஞானியாக / நீதிமானாக காணப்படுகிறாய் உன் விளக்கு தண்டை தேவன் நீக்கிப்போட்ட இந்த தருணத்தில், உன்னுடைய விளக்கை மரக்காலின் கீழாவது, பாத்திரத்தின் கீழாவது, கட்டிலின் கீழாவது மூடி வைக்காமல், மீண்டும் உன் விளக்கை, தேவன் விளக்கு தண்டின் மேல் வைக்கும் படியாக, நீ இரட்சிக்கப்பட்ட போது செய்து கொண்ட உடன்படிக் கையின் நேசத்திற்கு வந்து சேர்ந்து, மீண்டும் மனந்திரும்பும் போது நீ இழந்து போன விளக்கு தண்டை மீண்டும் தேவன் உன்னுடைய விளக்கிற்கு கொடுப்பார்.

3 உன் நற்கிரியைகளின் எல்லைகளை / ஊழியங்களை தேவன் நிக்கிக் போட்ட இந்த தருணத்தில், உன் நற்கிரியைகளை கீழே குறிப்பிடுகிற மூன்று காரியங்களின் அடிப்படையில் செயல்படுத்தாமல் இருக்க வேண்டும்

1. மரக்காலின் கீழ் / வியாபரத்தின் அடிப்படையில் நற்கிரியைகளை செயல்படுத்தாமல் இருக்க வேண்டும் Luk_11:33-36,

2. பாத்திரத்தின் கீழ் / பட்டம், பதவிகளின் அடிப்படையில் நற்கிரியைகளை செயல்படுத்தாமல் இருக்க வேண்டும் Luk_12:31-40, Luk_12:35, Luk_12:33-34, Job_22:2-3, Job_35:1-8,

3. கட்டிலின் கீழ் / சோம்பாலாக, நித்திரை மயக்கமாக நற்கிரியைகளை செயல்படுத்தாமல் இருக்க வேண்டும் Mat_5:14-16, Mar_4:21-25, Luk_8:16-18,

மூன்று காரியங்களின் அடிப்படையில் செயல்படுத்தாமல் இருந்து கொண்டு, மீண்டும் உன் நற்கிரியைகளின் எல்லைகளை / ஊழியத்தின் எல்லைகளை தேவன் விரிவாக்கும் படியாக நீ இரட்சிக்கப்பட்ட போது செய்து கொண்ட உடன்படிக்கையின் நேசத்திற்கு வந்து சேர்ந்து மீண்டும் மனந்திரும்பும்போது; நீ இழந்து போன உன்னுடைய நற்கிரியைகளின் / ஊழியத்தின் எல்லைகளை, தேவன் மீண்டும் உன்னுடைய நற்கிரியைகளுக்கு கொடுக்கிறபடியால் அநேகருக்கு உன்னுடைய நற்கிரியைகள் வெளிப்படும்.

Rev 2:6)Rev_2:6,

மதப்போதகத்தின் அடிப்படையிலான விசுவாசத்தினுடைய கொள்கைகளில் தீவிரமாக இருந்து கொண்டு அவைகளை தன்னுடைய வாழ்க்கையில் பின்பற்றுகிறவர்களை தேவன் வெறுக்கிறார். Rev_2:15,

Rev 2:7)Rev_2:7,

**முதலாம் சபையின் ஜெயங்கொள்ளுதல், காதுள்ளவன் கேட்கக் கடவன் :-**

ஜெயங்கொள்ளுகிறவனுக்கு ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்க கொடுப்பேன். கீழே குறிப்பிட்ட மூன்று காரியங்களை ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு ஜீவ விருட்சத்தின் கனியை தேவன் புசிக்கக் கொடுப்பார்.

1 நீ இரட்சிக்கப்பட்டபோது உனக்கு இருந்த நேசத்திற்கு வந்து சேர்ந்து மறுபடியும் மனந்திருப்புதல்

2. நீ இழந்து போன விளக்கு தண்டை மறுபடியும் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டு உன் விளக்கு வெளிச்சம் அநேகருக்கு பிரகாசமாக இருப்பது.

3. மதபோதகத்தின் விசுவாச கிரியைகளை விட்டு மனந்திரும்பி கிறிஸ்துவின் விசுவாச கிரியைகளை பின்பற்றுவது

நித்திய ஜீவ வார்த்தைகளின் விசுவாச கிரியைகளை செய்து ஆவி ஆத்துமா, நித்தியமாக பிழைப்பது; இந்த மூன்று காரியங்களை ஜெயங்கொள்ளாமல் இருக்கும் போது ஜீவ விருட்சத்தின் கனியை / நித்திய ஜீவ வார்த்தைகளின் விசுவாசத்தையும் அதன் கிரியைகளையும் பகுத்து அறிந்து கொள்ளாமல் ஆவி, ஆத்துமா மரணமடைகிறது Rev_2:2, Rev_2:14, Heb_5:12-14, Isa_5:20-23, Eze_33:13-16,

1-2 இரண்டாம் சபை - சிமர்னா பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

Rev 2:8) Rev_2:8,

முந்தினவரும் பிந்தினவரும் - விசுவாசத்தை துவக்கிற வரும் முடிகிக்கிறவருமாகிய கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்ற கிறிஸ்துவின் வார்த்தை அறிவிக்கிற நற்செய்தி Rev_1:8, Rev_1:5,

Rev 2:9) Rev_2:9,

1. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்

2. உன் உபத்திரவத்தை அறிந்திருக்கிறேன்

3. நீ ஐசுவரியமுள்ளவனாக இருந்தும் உனக்கு இருக்கிற தரித் திரத்தை அறிந்திருக்கிறேன்.

4. கள்ள யூதர்களின் தூஷணங்களை அறிந்திருக்கிறேன்.

1. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்:-

உனக்கு அறிந்திருக்கிற தேவ ஞானத்தினால் உன்னுடைய நீதியின் கிரியைகளை நிறைவேற்ற முயற்சி செய்கிறபோது, உன்னுடைய அறியாமைமையினால் உனக்கு வருகிற உபத்திரவத்தை தேவன் அறிந்திருக்கிறார்

2. உன் உபத்திரவத்தை அறிந்திருக்கிறேன்:-

எழுத்தின் படியும், ஆவியின் படியும், இருக்கிற தரித்திரமும் அதனால் வருகிற உபத்திரவமும் தொடர்ந்து வருவதற்கு, தரித்திரம் தனக்கு உதவியாக சில நல்ல வல்லமையுள்ள ஆயுதங்களை தன் கையில் வைத்திருக்கிறது.

Pro_23:21, Pro_13:18, Pro_21:20, Rev_6:6 Pro_21:17

தரித்திரம் இந்த வல்லமையுள்ள ஆயுதங்களை சமயத்திற் கேற்றபடி மிக துள்ளியமாக பயன்படுத்தி தனக்கு வருகிற எல்லா ஆசீர்வாதங்களையும் உள்ளே வரவிடாமல் தடை செய்கிறது.
Pro_6:9-11, Pro_24:30-34, Pro_20:13, Pro_19:15 Ecc_10:18,

தரித்திரம் வைத்திருக்கிற வல்லமையுள்ள ஆயுதங்களை யார்? மிக சாதுர்யமாக அதனிடமிருந்து திருடி எடுத்துக் கொள்ளுகிறார்களோ, அவர்களுக்கு எல்லா வகையான ஆசீர்வாதங்களையும் தடையில்லாமல் பெற்று அனுபவிக்கலாம். Mat_25:24-30, 1Ti_6:6-10, 1Ti_6:17-19, Pro_22:1, Pro_22:4, Jam_2:5-7,

ஒருவனுடைய ஆசீர்வாதங்களை உள்ளே வரவிடாமல் தடுப்பதற்காக, தரித்திரம் தன் கையில் வைத்திருக்கிற வல்லமை யுள்ள ஆயுதம் சோம்பல்.

ஒருவனுடைய ஆசீர்வதங்களை உள்ளே வரவிடாமல் தடுப்பதற்காக தரித்திரம் தன் பக்கம் வைத்திருக்கிற சில இரகசியமான வல்லமையுள்ள ஆயுதங்கள்.

1. புத்திமதிகளை தள்ளிவிடுதல்.

2. புத்தி மதிகளை அலட்சியப்படுத்துதல்.

3. சிற்றின்பத்தின் காலத்தை செலவழிப்பது.

4. மற்றவர்களை குற்றப்படுத்தி தன்னுடைய குறைகளை நியாயப்படுத்துவது.

5. பணம் / பதவி இவைகளை நாடி ஓடுவது.

6. கர்த்தருக்கு பயப்படாமல் இருப்பது.

7. வேலைகளில் சோம்பல் / உதாசீனம்.

3. நீ ஐசுவரியமுள்ளவனாக இருந்தும் உனக்கு இருக்கிற தரித் திரத்தை அறிந்திருக்கிறேன்:-

நான் ஆவிக்குரிய காரியங்களில் நீதிமான் / ஞானி என்று சொல்லுகிறவர்கள், தங்களுக்கு இருக்கிற ஆவிக்குரிய தரித்திரமாகிய தங்களுடைய பாவத்தையும் அறியாமைமையும் உணர்ந்து கொள் ளாமல் இருக்கிறபடியால், எழுத்தின் படியும், ஆவியின் படியும், தரித் திரம் இருக்கிறது; இதனால் வாழ்க்கையில் உபத்திரவமும் தொடரு கிறதை தேவன் அறிந்திருக்கிறார்

Rev_3:17 Hos_12:7-8,Rev_3:18-19 Psa_12:6, Psa_119:140, 1Co_8:2-3, Pro_28:11,

4. கள்ள யூதர்களின் தூஷணங்களை அறிந்திருக்கிறேன்:-

கள்ள யூதர்களினால் தேவனுடைய நாமம் புற ஜாதிகளிக்குள்ளே தூசிக்கப்படுகிறதை தேவன் அறிந்திருக்கிறார்

Rev_3:9, Rom_2:17-24, Rom_2:25-29,

Rev 2:10) Rev_2:10,

1)நன்மை செய்கிறபடியால் படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே. தீமை செய்கிற படியால் படப்போகிற பாடுகளைக் குறித்து முழுமையாக பயப்பட வேண்டும்.

2. பிசாசனவன் உங்களை சோதிப்பதற்காக சிலரை பத்து நாள் காவலில் போடுவான்.

3. நன்மை செய்கிறபடியால் பத்து நாள் காவலில் படப்போகிற பாடுகளைக் குறித்து பயப்படாதே.

4. மரணம் வரை / முடிவு வரை நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்பட்டு ஜீவ கீரிடத்தை பெறுவான். Jam_1:12-15, 2Pe_2:9-10, Jam_1:2-4, 1Co_10:13, Rev_2:10,

Rev 2:11 Rev_2:11,

**இரண்டாம் சபையின் ஜெயங்கொள்ளுதல், காதுள்ளவன் கேட்கக் கடவன் :-**

கட்டாயம் அல்ல, விருப்பமுள்ளவர் கேட்கக்கடவக்கள் / ஏற்றுக்கொள்ளக்கடவர்கள், ஜெயங்கொள்ளுகிறவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினி நரகத்தில் பங்கடைவதில்லை / தள்ளப்படுவதில்லை Rev_20:14-15,

1 உன் ஆவிக்குரிய காரியங்களில் உள்ள தரித்திரம் ஐசுவரியமாக மாற வேண்டும்.

2 உள்ளத்தில் ஆவிக்குரிய யூதனாக மாற வேண்டும்

3 சோதனைகளை நன்மையினால் ஜெயங்கொள்ள வேண்டும்.

இந்த மூன்று காரியங்களுக்காக மனந்திரும்பி ஜெயங் கொள்ளுகிறவர்கள் ஜீவ கீரிடத்தை / நித்திய இராஜ்ஜியத்தின் பதவிகளை பரிசாக பெற்றுக் கொள்ளுவார்கள்.

1-3 மூன்றாம் சபை - பெர்கமு பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி.

Rev 2:12 Rev_2:12

இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை வைத்திருக்கிறவர்/ தேவனுடைய வார்த்தைகளையும் அதனுடைய கிரியைகளையும் நிறைவேற்றுகிறவர் சொல்லுகிற நற்செய்தி Rev_1:16 Heb_4:12, Psa_149:6-9, Pro_5:1-14, 2Ti_2:12-13, Psa_89:34, Isa_55:10-11,

Rev 2:13 Rev_2:13

1. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்

2. சாத்தானுடைய சிங்காசனம் இருக்கிற பூமியில் குடியிருக்கிறதை அறிந்திருக்கிறேன்.

3. பூமியில் தேவனுடைய நாமத்தை பற்றிக் கொண்டிருப்பதை அறிந்திருக்கிறேன்.

4. அந்திப்பா கொல்லப்பட்ட நாட்களில் உண்டான விசுவாசத்தை மறுதலியாமல் இருப்பதை அறிந்திருக்கிறேன்.

Rev 2:14 Rev_2:14 ,

ஆகிலும் சில காரியங்களைக் குறித்து உன் பேரில் எனக்கு குறை உண்டு, பிலேயாமின் போதகத்தை பின்பற்று கிறவர்கள் உன்னிடத்தில் உண்டு Mic_6:5-9, Num_25:1-3, Num_25:16-18, Num_31:16, 2Pe_2:15-17,

Rev 2:15 Rev_2:15,

மதத்தின் அடிப்படையிலான போதகத்தை தேவன் வெறுக்கிறார். Rev_2:6,

Rev 2:16 Rev_2:16,

பிலேயாமின் போதகம், மதத்தின் போதகம் ஆகிய இவைகளிலிருந்து மனந்திரும்பு; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாக உன்னிடத்தில் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடு யுத்தம் பண்ணுவேன் / தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடைபெறும் Joh_12:47-48, Mat_7:24-29, Deu_8:3, Job_22:22, Job_23:12, Jer_9:20,

Rev 2:17 Rev_2:17,

**மூன்றாம் சபையின் ஜெயங்கொள்ளுதல், காதுள்ளவன் கேட்கக் கடவன் :-**

கட்டாயம் அல்ல, விருப்பமுள்ளவர் கேட்கக்கடவக்கள் / ஏற்றுக்கொள்ளக்கடவர்கள்,

1 பிலேயாமின் போதகத்தைப் போல உள்ள கள்ள தீர்க்க தரிசிகளின் போதகம் / உபதேசம்

2 நிக்கொலாய் மதத்தின் போதகம் / கிறிஸ்துவின் விசுவாச அடிப்படையில் உள்ள மதப் போதகம், அவைகளின் மார்க பேதங்களின் உபதேசங்கள் ஆகிய இவைகளிலிருந்து மனந்திருப்பி ஜெயங்கொள்ள வேண்டும்,

ஜெயங்கொள்ளுகிறவர்களின் பிரதிபலன்கள்

1. மறைவான மன்னா தேவனுடைய சத்தியமான வார்த்தை களின் விருந்து

2. வெண்மையான குறிக்கல் / அடையாளத்தின் கல்

3. வெண்மையான கல்லில் புதிய நாமம்.

Joh_6:48-51, Joh_6:56-58, Amo_8:11-14, Exo_16:20-30, Lev_25:20, Isa_34:16-17, Isa_65:12-15,

1-4 நான்காம் சபை - தியத்திரா பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

Rev 2:18 Rev_2:18,

அக்கினி ஜூவாலை போன்ற கண்களும், பிரகாச முள்ள வெங்கலம் போன்ற பாதங்களையுடைய தேவ குமாரன் சொல்லுகிறதாவது / சகலத்தையும் பரிசோதித்து நியாயத்தீர்ப்பு கொடுக்கிற கிறிஸ்துவின் வார்த்தை சொல்லுகிற நற்செய்தி :-

Rev_19:12-13, Rev_1:14-15, 2Ch_16:9,Psa_11:4-7,

Rev 2:19 Rev_2:19,

இந்த வசனத்தில் சொல்லப்பட்ட ஆறு காரியங்களை அறிந்திருக்கிறேன்.

1. உன் கிரியைகள் 2. உன் அன்பு 3. உன் ஊழியம் 4. உன் விசுவாசம் 5. உன் பொறுமை 6. முன் செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறது, ஆரம்ப முதல் கிரியைகளில் படிப்படியாக முன்னேறி வளர்ச்சியடைதல் / முந்தினோர் பிந்தினோராக மாறாமல் எப்பொழுதுமே முந்தினோராகவே இருப்பது 2Pe_2:20-22, 2Pe_1:4-7, 2Pe_1:8-12, Mat_19:30, Mar_10:31, Luk_13:30, Mar_4:26-29,

Rev 2:20 Rev_2:20,

உன் பேரில் எனக்கு குறை உண்டு

Rev 2:19 Rev_2:19, - ஆறு நன்மைகள் இருந்தாலும் இன்றும் குறைகள் உண்டு கள்ள தீர்க்க தரிசியான யேசேபேலின் போதகத்தால் சபைகளில் தேவனுடைய ஊழியர்கள் வஞ்சிக்கப்பட்டு வேசித்தனம் பண்ணவும், விக்கிரகங்களுக்கு படைத்தவைகளை புசிக்கவும், தியத்திரா சபை இடங்கொடுக்கிறது.

விசேஷ வரம் பெற்றவர்கள் என்று கள்ளத்தீர்க்க தரிசிகளை சபைக்கு அழைத்து வந்து, அவர்களுடைய போதகத்தினால் தேவ ஜனங்கள் வஞ்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை மீறுவதற்கும், ஜாதிகளின் ஆசரிப்பு முறைகளை பின்பற்றுவதற்கும் சபை இடம் கொடுக்கிறது. 1Ki_21:9-10, Pro_27:23, Jer_23:1-4, Eze_34:1-10, Zec_11:4-6,

Rev 2:21 Rev_2:21,

கள்ள தீர்க்க தரிசிகளுக்கு மனந்திருப்புவதற்கு தவணை கொடுத்தேன், ஆனால் மனந்திரும்புவதற்கு அவர்களுக்கு விரும்பம் இல்லை.

Rev 2:22-23 Rev_2:22-23,

1. யேசபேலை கட்டில் கிடையாக்குவேன்:- கள்ள தீர்க்க தரிசிகளுக்கு கனநித்திரையின் ஆவியை கட்டளையிட்டு, அவர்களுடைய ஊழியங்களை கட்டில் கிடையாக்குவேன்.

2. கள்ளதீர்க்க தரிசிகளை அங்கிகரித்து அதனால் பொருள் சாம்பாதித்தவர்கள் தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பாமல் இருக்கும்போது தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளப்படுவார்கள்.

3. கள்ளதீர்கக தரிசிகளை அங்கிகரித்து ஏற்றுக்கொள்ளுகிறவர்களுடைய ஆவி, ஆத்துமா சாகவே சாகும்.

4. அப்பொழுது தேவனே உள்ளத்திரியங்களையும், இருதயங்களையும், ஆராய்கிறவரென்று எல்லா சபைகளும் அறிந்து கொள்ளும்.

5. மீதியாக இருக்கும் மற்றவர்கள் ஒவ்வொருவருடைய கிரியைகளின்படி தேவன் அவர்களுக்கு பிரதிபலனைக் கொடுக்கிறார்.

Isa_29:10-14, Isa_5:11-16, Jer_17:9-11, Jer_17:5-6, Jer_17:7-8, Psa_84:5-7, Psa_146:3-5,

Rev 2:24 Rev_2:24,

யேசபேலின் கள்ளத்தீர்க்க தரிசன போதகத்தை பின்பற்றாதவர்கள், சாத்தானுடைய ஆழங்களை அறிந்து கொள்ளாமல் இருக்கிறவர்கள், ஆகிய இவர்களுக்கு வேறொரு பாரமும் இல்லை / ஆகிய இவைகளை அறிந்தவர்களுக்கு இதுவே பாரம்.

1. கள்ள தீர்க்கதரிசன போதகத்தை பின்பற்றுகிறவர்களுக்கு, அதுவே அவர்களுக்கு பாரம்.Jer_23:36, Jer_23:33-34, Jer_23:38-40, 2Pe_2:1-3,

2. தேவனுடைய வார்த்தைகளை பின்பற்றுகிறவர்களுக்கு அது அவர்களுக்கு பாரம் இல்லை. 1Jo_5:3, Mat_11:28, Psa_55:22, Jer_23:35-37, Rom_2:14-15, Heb_5:12-14, Mic_6:8-9, Psa_49:4, Psa_92:2-3, Pro_3:7-10,

3. சாத்தானுடைய ஆழங்களை அறிந்தவர்களுக்கு அதுவே

அவர்களுக்கு பாரம்.

Gen_1:2, Job_28:12-14, Pro_9:13-18, Ecc_7:24, Psa_107:23-30, Gen_49:5-7, 1Co_13:2, Eze_28:3-10, 2Th_2:7-12,

4. தேவ ஆவியினால் தேவனுடைய ஆழங்கள், இரகசியங்கள், ஆகிய இவைகளை உணர்ந்து கொண்டவர்களுக்கு, அது அவர்களுக்கு பாரம் இல்லை.

Luk_6:47-49, Gen_1:2 1Co_2:4-10, 1Co_2:11-16, Isa_64:4-5, Psa_42:7, Gen_1:2, Joh_5:39, Isa_34:16-17, Psa_111:2, Psa_1:1-6, Mal_3:13-18, Pro_1:10-19, Num_16:38, 2Ti_3:5-7, 2Pe_3:3-4, 2Pe_2:1-3 Psa_25:14, Pro_3:32, Isa_37:30-32, Jer_4:3, Hos_10:12-13, Mat_13:7,

Rev 2:25 Rev_2:25,

உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக் கொண்டிருங்கள்:-_,

Rev_2:19, 1. உன் கிரியைகள் 2. உன் அன்பு 3. உன் ஊழியம் 4. உன் விசுவாசம் 5. உன் பொறுமை 6. முன் செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறது ஆரம்ப முதல் கிரியைகளில் படிப்படியாக முன்னேறி வளர்ச்சியடைதல் / முந்தினோர் பிந்தினோராக மாறாமல் எப்பொழுதுமே முந்தினோராகவே இருப்பது

2Pe_2:20-22, 2Pe_1:4-7, 2Pe_1:8-12, Mat_19:30, Mar_10:31, Luk_13:30, Mar_4:26-29,

ஆறு வகையான நற்கிரியைகளை தேவன் வருமளவும் உறுதியாக பற்றிக் கொண்டிருங்கள்.

Rev 2:26-28 Rev_2:26-28,

**நான்காம் மூன்றாம் சபையின் ஜெயங்கொள்ளுதல், காதுள்ளவன் கேட்கக் கடவன் :-**

உன் பேரில் எனக்கு இருக்கிற குறைகளை நீ ஜெயங்கொள்ள வேண்டும்.

1. யேசபேலின் போதகம் - கள்ள தீர்க்க தரிசனம்.

2. சாத்தானின் ஆழங்கள் - அசுத்த ஆவியின் உபதேசங்கள்

(Rev 2:25, Rev_2:25, Rev : 2-19 Rev_2:19,) இவைகளில் உள்ள ஆறு வகையான நற்கிரியைகளை உறுதியாக பற்றிக் கொண்டிருந்து,(Rev 2:20,Rev_2:20, Rev 2 :24 Rev_2:24, ) சொல்லப்பட் யேசபேலின் போதகம், சாத்தானின் ஆழங்கள் ஆகியவைகளை ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு கீழே குறிப்பிடுகிற மூன்று ஆசீர்வாதங்களை தேவன் தருகிறார்.

நான்காம் சபையில் ஜெயங்கொண்டவர்களின் பிரதிபலன்கள் :-

1. ஜாதிகளின் மேல் அதிகாரத்தை கொடுப்பேன் :-

ஜாதிகளின் ஊழிய அழைப்பு / ஆளுகையை உனக்கு கொடுப்பேன்.

2. இரும்புக் கோலால் ஜாதிகளை ஆளுவான் அவர்கள் மண்பாண்டங்கள் போல நொறுக்கப்படுவார்கள்/ தேவனுடைய நியாயத்தீர்ப்பின் செய்தியைக் கேட்கும் போது அவர்கள் இருதயம் மண் பாண்டங்கள் போல நொறுக்கப்படும்.

3. விடிவெள்ளி நட்சரத்திரத்தை அவனுக்கு கொடுப்பேன்.

இருளில் பிரகாசிக்கிற கிறிஸ்துவின் வார்த்தையை பெற்றுக் கொண்டு மற்றவர்களுக்கு பிரகாசிக்கிற ஒளியாக இருப்பது

Rev_2:26, Rev_2:24, Rev_2:19, Rev_2:24, Rev_2:27, Psa_2:1-9, Rev_2:28, 2Pe_1:19, 2Co_4:6,

Rev 2:29 Rev_2:29

ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக் கடவன்/ பரிசுத்த ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை விரும்பமுள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளக்கடவர்கள்.

1-5 ஐந்தாம் சபை - சர்தை பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

Rev 3:1 Rev_3:1,

1-0 தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்க ளையும் உடையவர் சொல்லுகிற இரட்சிப்பின் நற்செய்தி

1. வேதம் 2. சாட்சிகள் 3. வழிகள் 4. கட்டளைகள் 5. பிரமாணங்கள் 6. கற்பனைகள் 7. நீதி நியாயங்கள் / நியாயத்தீர்ப்புகள்; ஆகிய இந்த ஏழு வகையான வார்த்தைகளில் வெளிப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளாகவும், இருளில் பிரகாசிக்கிற ஏழு விடி வெள்ளி நட்சத்திரங் களைப்போல உள்ள தேவனுடைய வார்த்தைகளை, தம்முடைய தூதர்களாக அனுப்புகிறவர் சொல்லுகிற இரட்சிப்பின் நற்செய்தி

Rev_1:4-5, Rev_4:5, Rev_5:6, Zec_3:9, Zec_4:10, Psa_12:6, Rev_1:20, 2Pe_1:19, Job_38:12-13, Joh_1:1-5, Joh_12:34-36, Isa_55:10-11, Mat_23:28, Luk_16:15 , Joh_21:6,

தேவனுடைய ஏழு ஆவிகளின் மூலம் வெளிப்பட்ட தேவனு டைய ஏழு பிரமாணங்கள்; கிறிஸ்துவின் சரீரமான மண் குகையில் பரிசோதிக்கப்பட்டு உண்மையான சாட்சியை பெற்று, இருளில்

பிரகாசிக்கிற ஏழு நட்சத்திரங்களைப் போலவும், தேவனுடைய ஏழு கண்களின் ஒளியாகவும், பரிமாண வளர்ச்சியடைந்து, பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது.

1-1 கிறிஸ்துவாகிய மூலைக்கல்லின் பரிமாணத்தில் வெளிப் படுகிற ஏழு புள்ளிகள் தேவனுடைய ஏழு கண்களாக பிரதி பலிக்கிறது. Zec_4:7-10,

1-2 தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் வெளிப்பட்ட வானவில்லின் வெளிச்சத்தினுடைய பரிமாணத்தில் வெளிப்படுகிற ஏழு நிறங்கள் தேவனுடைய ஏழு கண்களாக பிரதி பலிக்கிறது. Gen_9:8-17,

1-3 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட ஜீவ சுவாசத்தின் பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதனுடைய ஜீவாத்துமாவின் ஏழு செயல்பாடுகள், தேவனுடைய ஏழு கண்களைப் போல பிரதி பலிக்கிறது

1-4 வடக்கிலுள்ள சீயோன் பா்வதத்திலிருந்து வெளிப்படு கிற வெளிச்சத்தின் பரிமாணங்களில் ஏழு திசைகள் தேவனுடைய ஏழு கண்களாக பிரதிபலிக்கிறது. Eze_9:1-2 ,Jer_47:2 ,Psa_48:2,Job_37:21-22, Psa_74:2,Psa_75:6,Job_35:13-16,

1-5 தேவனுடைய வாயிலிருந்து வெளிப்படுகிற வசனங்களின் சத்தம், பரிணாம வளர்ச்சியின் மூலம் சங்கீத சுரமண்டலத்தின் ஏழு இராகங்களாக வெளிப்பட்டு, தேவனுடைய ஏழு கண்களாக பிரதிபலிக்கிறது. Psa_49:4, Psa_92:2-3,

1-6 தேவனுடைய வாயிலிருந்து வெளிப்படுகிற வசனங் களின் விசுவாசங்கள் / கருத்துக்கோட்பாடுகள், சுரமண்டலத்தின் ஏழு இராகங்களைப் போல, தேவனுடைய ஏழு பிரமாணங்கள்

வெளிப்பட்டு, தேவனுடைய ஏழு கண்களைப் போல பிரதி பலிக்கிறது. Psa_19:1-10, Psa_119:1-8,

1-7 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட இரகசியங்கள், சுரமண்டலத்தின் ஏழு இராகங்களைப் போல, ஏழு வகையான உவமை மொழிகளில் வெளிப்பட்டு, தேவனுடைய ஏழு கண்களாக பிரதிபலிக்கிறது.

2-0 நீ உயிருள்ளவனென்றும் பெயர் பெற்றிருந்தும் செத்தவ னாக இருப்பதை அறிந்திருக்கிறேன்.

நீ மற்றவர்களுக்கு முன்பாக ஆவி, ஆத்துமாவின் உயிர் உள்ளவனென்று பெயர் பெற்றிருந்தாலும் உன்னுடைய ஆவி, ஆத்துமாவை, தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டு; நீயே உன்னை பரிசோதிக்கும்போது, உன்னுடைய ஆவி, ஆத்துமா, மரணமடைந்திருக்கிறது; வெளியே நீதிமானாகவும், உள்ளே துன்மார்க்கனாகவும், உள்ள மாயக்காரனுடைய ஆவிக்குரிய வாழ்க்கை வெளிப்படுகிறது

Mat_23:25-28, Luk_16:15 , Isa_64:6, Job_22:1-2, Job_25:4, Job_32:1-2, Job_35:1-8, Phi_3:9-11, Rom_9:31-32, Jer_23:11-15, Mat_23:23, Mat_7:21-29, Eze_13:9-16, Joh_21:6,

Rev 3:2 Rom_3:2,

நீ விழித்துக்கொண்டு சாகிறதற் கேதுவானவைகளை ஸ்திரப்படுத்து :-

1. நீ உன்னுடைய ஆவி, ஆத்துமாவை பரிசோதித்து, உன்னு டைய ஆவி, ஆத்துமாவில் மரணத்தை உண்டாக்குகிற காரியங் களை கண்டறிந்து அவைகளிலிருந்து மனந்திரும்பு.

2. உன் கிரியைகள் தேவனுக்கு முன்பாக நிறைவுள்ளவைகளாக நான் / கிறிஸ்து காணவில்லை நீங்கள் மனுஷர்களுக்கு முன்பாக நீதிமான்களாக காணப்படுகிறீர்கள், ஆனால் நீங்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்கள் அல்ல

Rev 3:3 Rev_3:3,ஆகையால் நீ தேவனிடம் கேட்டு பெற்றுக் கொண்ட வகையை நினைவு கூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு

**1 தேவனிடமிருந்து கேட்டு பெற்றுக்கொண்டவைகள் :-**

1-1 ஜெப விண்ணப்பத்தினால் தேவனிடமிருந்து கேட்டு பெற்றுக்கொண்டவைகளுக்காக தேவனுடைய நாமத்திற்கு சாட்சியாக வாழ்வது, தேவனுடைய பிரமாணத்தின்படி காணிக்கை, தசமபாகம் தேவனுடைய ஆலயத்தில் செலுத்துவது.

Mal_3:7-10, Deu_28:12, Isa_50:4, Deu_28:23-24, Lev_26:19-20,Lev_26:3-4, Zec_10:1-4, Job_29:21-23, Deu_11:13-17, Psa_18:21-26, Jer_5:23-27, Jer_17:7-11,

1-2 பொருத்தனையினால் தேவனிடமிருந்து கேட்டு பெற்றுக்கொண்டவைகளுக்காக; பொருத்தனை செய்யப்பட்ட காணிக்கையை தேவனுக்கு செலுத்துவது

Ecc_5:4-6, Pro_20:25, Nah_1:15, Jon_2:8-10, Psa_50:14-15, Psa_66:14, Psa_116:12-14, Psa_116:17-19, Psa_76:11, Num_30:1-8, Exo_20:7, Pro_30:9; Jer_4:2; Mat_5:33-37, Hos_7:8-10,

**2 நீ விழித்திராவிட்டால் திருடனைப் போல உன் மேல் வருவேன் :-**

நீ விழித்திருந்து மனந்திருப்பாவிட்டால் நீ எதிர்பார்க்காத நேரத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு உன் மேல் வரும்

**3. நான் உன் மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்:-**

தேவனுடைய நியாயத்தீர்ப்பு உன் மேல் வரும் நேரத்தை அறியாதிருப்பாய் / தேவனுடைய நீயாயத்தீர்ப்பு உன் மேல் எந்த நேரத்திலும் வெளிப்படலாம்.

Rev 3:4 Rev_3:4,

தங்களுடைய நீதிக்கிரியைகளை அசுத்தப்படுத் தாதவர்கள் /பின்மாறிப்போகாதவர்கள் தங்கள் நீதியின் வஸ்திரத்தை தரித்துக் கொண்டு என்னோடே கூட நடப்பார்கள். Rev_19:7-9, Rev_14:1-4 Isa_4:1,Job_14:1-3, Job_15:14, Job_25:4, ,Heb_12:5-8,Heb_12:15-17 Gal_4:29-31,Deu_32:36, 1Ki_14:10, 1Ki_21:21, 2Ki_9:8, 2Ki_14:26, Rev_3:18, Rev_16:15,

Rev 3 :5 Rev_3:5,

**ஐந்தாம் சபையின் ஜெயங்கொள்ளுதல், காதுள்ளவன் கேட்கக் கடவன் :-**

**சர்தை சபையின் ஜெயங்கொள்ளுதல் :-**

1 மாயக்காரனை ஜெயங்கொள்ளுவது

2 தேவ நீதியில் ஜெயங்கொள்ளுவது

3 பின்மாற்றத்தை ஜெயங்கொள்ளுவது

4 கேட்டு பெற்றுக் கொண்டவைகளில் ஜெயங் கொள்ளுவது.

**ஜெயங்கொள்ளுகிறவர்களின் பிரதிபலன்கள்:-**

1 வெண் வஸ்திரம் / நீதியின் வஸ்திரம் தரிப்பிக்கப்படும்.

2 ஜீவ புஸ்தகத்தில் பெயர் கிறுக்கிப் போடாமல், இருப்பது. ,

Psa_69:28, Psa_69:21-28 ,Jer_17:13

3 பிதாவின் முன்பாகவும், தூதர்களுக்கு முன்பாகவும் அவனுடைய நாமத்தை அறிக்கையிடுவது

Rev 3:6 Rev_3:6,

காதுள்ளவன் கேட்கக்கடவன் :- விருப்பமுள்ளவர்கள் இவைகளை ஏற்றுக் கொள்ளக்கடவர்கள்.

1-6 ஆறாம் சபை - பிலதெல்பியா பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

Rev 3:7 Rev_3:7,

1. பரிசுத்தமுள்ளவர்

2. சத்தியமுள்ளவர்

3. தாவீதின் திறவு கோலை உடையவர்

4. பூட்டக் கூடாதபடி திறக்கிறவர் (எதிர்காலத்தை யாரும் தடை செய்யாதபடி திறந்து விடுகிறவர்)

5. திறக்கக் கூடாதபடி பூட்டுகிறவர் (கடந்த காலம் இனி ஒரு போதும் வராதபடி தடை செய்கிறவர்)

ஆகிய இவைகளின் அதிகாரத்தை உடையவர் சொல்லுகிற தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

Rev 3:8 Rev_3:8,

1. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்.

2. கொஞ்சத்தில் உண்மையாக இருந்து தேவனுடைய நாமத்தை மறுதலியாமல் வசனத்தை கைக்கொண்டபடியால், புதிய நன்மைகளை உனக்கு தருகிறேன். அதை ஒருவனும் தடை செய்ய

மாட்டான் Ecc_9:11-12, Psa_31:15,

Rev 3:9 Rev_3:9 ,

தேவனுடைய நாமம் புற ஜாதிகளுக்குள்ளே தூசிக்கப்படுவதற்கு காரணமாயிருந்த கள்ள யூதர்கள், உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து கொள்ளுவதால், தேவன் உன்மேல் அன்பாக இருப்பதை அறிந்து கொள்ளும்படி செய்வார். Rev_2:9, Rom_2:17-24,

Rev 3:10 Rev_3:10,

நீ பொறுமையைக் குறித்த வசனங்களை காத்துக் கொள்ளுகிறபடியால் சோதனைகளுக்கு தப்பித்துக் கொள்ளுவாய் Rom_15:4, , Luk_8:15, Luk_21:16-19, Rom_5:3-4, Rom_12:12,

Rev 3:11 Rev_3:11,

ஒருவரும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாபடி உனக்குள்ளவைகளை காத்துக்கொள் (உன் நற்கிரியைகளில் முன்னேறிச் செல்லு) Mat_25:21, Luk_19:17 ,

1, Rev 3:8 (Rev_3:8 ) கொஞ்சத்தில் உண்மையாகயிருந்து அதிகத்தில் உண்மையுள்ளவனாக முன்னேறு

2, Rev 3:10 (Rev_3:10,) பொறுமையிலிருந்து நீடிய பொறுமைக்கு முன்னேறி சோதனைகளுக்கு தப்புவது (பொறுமை இழந்தால் சோதனைகள், எரிச்சல், கோபம், வாக்குவாதங்கள் தொடரும்)

**ஆறாம் சபையின் ஜெயங்கொள்ளுதல், காதுள்ளவன் கேட்கக் கடவன் :-**

**பிலதெல்பிய சபையின் ஜெயங்கொள்ளுதல் :-**

1 Rev 3:8 (Rev_3:8 )நற்கிரியைகளில் பின்வாங்கிப் போகாமல் முன்னேறுவதில் ஜெயங்கொள்ளுவது

2, Rev 3:10 (Rev_3:10,) பொறுமையைக் காத்துக் கொண்டு சோதனைகளை ஜெயங்கொள்ளுவது

Rev 3:12 Rev_3:12,

**ஜெயங்கொள்ளுகிறவர்களின் பிரதி பலன்கள்:-**

1 தேவனுடைய ஆலயத்தில் தூணாக இருப்பதால் அவன் தேவனுடைய ஆலயத்தை விட்டு நீங்காமல் நிலைத்திருப்பான்.

2 தலைமுறை தலைமுறையாக இருக்கும் தேவனுடைய நாமத்தை அவன் மேல் எழுதுவேன்

3 புதிய எருசலேமிற்கு பங்குள்ளவன் என்பதை அவன் மேல் தேவன் எழுதுவார் Exo_3:13-15, Rev_19:12-13, Rev_21:2,

Rev 3:13 Rev_3:13,

காதுள்ளவன் கேட்கக்கடவன் / விருப்பமுள்ளவர்கள் இவைகளை ஏற்றுக் கொள்ளக் கடவர்கள்.

1-7 ஏழாம் சபை - லவோதிக்கேயா பட்டணத்து சபைக்கு தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

Rev 3:14 Rev_3:14,

உண்மையும், சத்தியமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு

ஆரம்பமும் முடிவுமாயிருக்கிற கிறிஸ்துவாகிய தேவனுடைய வார்த்தை, அறிவிக்கும் தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி Rev_1:5 , Joh_1:1-5, 2Pe_3:5-6,

Rev 3:15 Rev_3:15,

1. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் 2. நீ குளிருமல்ல, அனலுமல்ல 3. நீ குளிராயாவது, அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்; உன் ஆவிக்குரிய வாழ்க்கையில் நீ பாவியுமல்ல நிதிமானும் அல்ல. நீ பாவியாகவோ அல்லது நீதிமானாகவோ இருநதால் நல மாயிருக்கும். Isa_41:21-24, Pro_5:3-7, Mat_6:24, Luk_16:13-15,

Rev 3:16 Rev_3:16,

உன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் நீ எப்பொழுதுமே பாவியாகவும் இல்லாமல், நீதிமானகவும் இல்லாமல், இந்த இரண்டிற்கும் மத்தியில் இருந்து கொண்டிருக்கிறபடியால், உன்னை தேவனுடைய வாயிலிருந்து தேவன் வாந்தி பண்ணிப் போடுகிறார் .

தேவன் உன்னை வாந்தி பண்ணினபடியால் நீயும் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட வார்த்தைகளையும் ஆசீர் வாதங்களையும், வாந்தி பண்ணிப்போடுகிறாய் / தூக்கிப்போடு கிறாய், மேலும் உன்னுடைய குடும்பமும், சமுதாயமும், தேசமும் உன்னை வாந்தி பண்ணிப்போடுகிறது / உன்னை வெளியே தூக்கிப் போடுகிறது. Num_12:7-14, Isa_28:7-9, Hab_2:15-16, Jer_48:26, Jer_25:27-29,Job_20:15-18, Pro_15:2, 2Pe_2:20-22, Lev_20:22-23, Job_20:12-16, Psa_59:7-9, Isa_57:20-21,

தேவனுடைய வார்த்தைகளை நீ வாந்தி பண்ணி அதிலே புரளுகிறபடியால், உன்னுடைய ஆவிக்குரிய மனிதனாகிய மாயக் காரன் மற்றவர்களுக்கு முன்பாக வெளிப்படுகிறான், இப்பொழுது நீ

பாவியாகவும் இல்லாமல் நீதிமானாகவும் இல்லாமல் இருக்கிற உன்னுடைய இரட்டை வேடம், ஆவிக்குரிய மனிதனின் உள்ள குஷ்டரோகம் / மாயக்காரன் எல்லாருக்கும் முன்பாக வெளிப்படுகிறான்.

Rev 3:17 Rev_3:17,

தன்னிடம் உள்ள மாயக்காரனுக்கு (1 பரிதபிக்கப்பட்டவன் 2 தரித்திரன் 3 குருடன் 4 நிர்வாணி) இந்த நான்கு வகையான குறைகள் இருக்கிறது என்பதை அறிந்து உணர்ந்து கொள்ளாமல்; (1 நான் பாக்கியவான் 2 நான் ஐசுவரியவான் 3 நான் திரவியமுள்ளவன் 4 எனக்கு ஒரு குறையுமில்லை) என்று; தன்னிடம் உள்ள ஆவிக்குரிய மனிதனுக்கு நான்கு வகையான ஆசீர்வாதங்கள் இருக்கிறது என்பதை மாயக்காரனே தன்னைக் குறித்து புகழ்ந்து கொண்டிருப்பது.

Hos_12:7-8, Mat_25:29-30 , Pro_13:18, Pro_24:30-34, Isa_42:18-19, Isa_56:10, 2Pe_1:9, Zep_1:17, Mat_13:14, Hos_2:8-10, Amo_2:10-16,

Rev 3:18 Rev_3:18,

1. நீ ஐசுவரியவனாகும்படி நெருப்பிலே புடமிடப்பட்ட, பொண்ணுக்கு ஒப்பான தேவனுடைய வார்த்தைகளை என்னிடம் வாங்கிக் கொள்ள உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்

Psa_12:6, Psa_119:140, Job_28:12-19,

2. உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்ளுவதற்கு வெண் வஸ்திரமாகிய நீதியின் கிரியை களை என்னிடத்தில் வாங்கிக் கொள்ள உனக்கு ஆலோசனை சொல் லுகிறேன். Rev_16:13-15, Rev_19:8,

### 3. கண் பார்வைக்கு உட்புற பாதுகாப்பு:-

உன்னுடைய ஆவிக்குரிய கண்களின் குருட்டுத்தன்மை

நீங்குவதற்கு, எண்ணெயாகிய கடிந்து கொள்ளுதலை ஏற்றுக் கொண்டு, பிரகாசமுள்ள பார்வையைப் பெற்று, தேவ தரிசனங்களை தெளிவாக கண்டு உணர்ந்து கொள்ளும்படி உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் Mat_6:22-23, Luk_11:34-36, Mat_6:16-18, Psa_141:5, Luk_10:33-35, Rev_6:5-6, Mat_25:3-4 , Mat_25:8,Psa_116:12-13, Mar_6:13, Jam_5:14,
Luk_12:35-40, Heb_6:4-8, Isa_7:5-7, (Isa_8:20-22, )

### 4. கண் பார்வைக்கு வெளிப்புற பாதுகாப்பு :-

தன்னுடைய ஆவிக்குரிய கண்களுக்கு தெளிவாகவும், பரவலாகவும், வெளிப்படுகிற தேவ தரிசனங்களை ஒருங்கிணைத்து, அவைகளுக்குள்ளே தேவன் தனக்கு பகிர்ந்து அளிக்கிற தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுவதற்கு; கர்த்தருக்கு பயந்து, பொல்லாப்பை விட்டு விலகி தேவனுடைய பிரமாணங் களுக்கு கீழ்படிய வேண்டும்.

Pro_23:5, Isa_33:15-17, Deu_16:19, Psa_101:3, Psa_119:37, 1Jo_2:15-16, Job_31:7-12, Pro_30:15,

Rev 3:19 Rev_3:19

தேவனால் நேசிக்கப்படுகிறவர்கள், தேவனுடைய வழிகளிலிருந்து வழி விலகும்போது, தேவன் கடிந்து கொண்டு சிட்சிக்கிறார் ; ஆகையால் இவர்கள் ஜாக்கிரதையாக இருந்து மனந் திரும்பி மீண்டும் தேவனுடைய வழிகளில் நடந்து தேவ சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். ,Job_5:17-27, Heb_12:5-13, Pro_1:23-33, Zec_7:9-14,Zec_1:1-6,Hos_14:1-3, Isa_66:4, Jer_2:27, Eze_8:16,

Rev 3:20 Rev_3:20

1 இருதயத்தின் வாசற்படியிலே தேவனுடைய வார்த்தை நிற்று தட்டிக் கொண்டிருக்கிறது

2 ஒருவன் தேவனுடைய வார்த்தைகளின் சத்தத்தைக்

கேட்டு, தன்னுடைய இருதயக் கதவை திறக்கும்போது தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை தேவன் விருந்தாக புசிக்க கொடுக்கிறார்.

Rev_19:6-9, Pro_8:34-36, Jam_5:9, Mat_24:33, Luk_12:35-40, Mat_25:6-13, Mat_22:1-14, Luk_14:15-24, Isa_65:13-14, Pro_9:1-6, Zep_1:7-8, Est_1:5-8, Est_1:9-14,

3. தேவன் கொடுத்த சத்தியமான வார்த்தைகளின் விருந்தை புசித்து, தேவனுடைய இருதயத்தை சந்தோஷப்படுத்துவதற்காக தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது, ஒருவன் தேவனுடைய இருதயத்திற்கு கொடுக்கும் விருந்து.

Rev_3:20, Joh_4:31-34,Pro_23:15-16, Pro_27:11, Pro_22:17-21,Joh_16:7-13; Joh_14:16-21; Joh_14:26; Joh_15:26-27;Luk_10:22, Joh_14:23-24; Eph_4:30, Act_1:4-5, Isa_2:3, Joh_15:7; Act_1:8, Act_1:12,1Co_12:4-12, Mat_25:15; Rom_12:3-6, Rom_15:20; 1Co_12:11-12; Eph_4:7-13; 1Pe_4:10-11, 1Co_4:6-7, 1Co_12:28-31,,2Co_10:14; Psa_149:1-9 Hab_2:1-4,

Rev 3:21 Rev_3:21,

**ஏழாம் சபையின் ஜெயங்கொள்ளுதல், காதுள்ளவன் கேட்கக் கடவன் :-**

கிறிஸ்து பாவத்தையும் மரணத்தையும் ஜெயங் கொண்டு பிதாவின் வலது பக்க சிங்காசனத்தில் உட்கார்ந்தது போல, பாவத்தையும், மரணத்தையும் ஜெயங்கொள்ளுகிறவர்கள் எவர்களோ, அவர்கள் கிறிஸ்துவின் வலது பக்க சிங்காசனத்தில் உட்காரும் படி கிறிஸ்து அருள் செய்கிறார்.

Rev 3:22 Rev_3:22, இவைகள் கட்டாயம் அல்ல, விருப்பமுள்ளவர்கள் இவைகளை ஏற்றுக் கொள்ளக் கடவர்கள்.

## இரண்டாவது அத்தியாயம்

நியாயப் பிரமாண நீதியினுடைய இரட்சிப்பின் விசுவாசமும் கிரியைகளும்

## பொருளடக்கம்

2-1 நியாயப்பிரமாணத்தின் மூலம் வருகிற தேவனுடைய இரட்சிப்பு

2-2 நியாயப்பிரமாண இரட்சிப்பின் பிரமாணம்

2-3 நியாப்பிரமாணத்தில் சாட்சியிருக்கிற மூலக்காரணிகள்

2-4 நியாயப்பிரமாணம் இருதயத்தில் சாட்யிருக்கிற படியால் வெளிப்பட்ட நன்மைகளின் கிரியைகள்

2-5 நியாயப்பிரமாணம் வாயினால் சாட்சியிடுகிற படியால் வெளிப்பட்ட தீமைகளின் கிரியைகள்

2-6 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொள்ளும் வழி முறைகள்

2-7 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொண்டவர் களின் பிரதிபலன்கள்

2-8 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொள்ளாத வர்களின் பிரதிபலன்கள்

### 2-1 நியாயப்பிரமாணத்தின் மூலம் வருகிற தேவ னுடைய இரட்சிப்பு :-

பொதுவான இரட்சிப்பு / ஜாதிகளின் இரட்சிப்பு ஆவி, ஆத்துமா

மட்டும் அக்கினி நரகத்திலிருந்து இரட்சிப்பை பெற்றுக் கொண்டு; சரீரம் பாதாளத்தின் வல்லமையினால், தேவனுடைய ரூப மும், சாயலையும் பெற்றுக் கொள்ளாமல் மரணமடைகிறது.

Jud_1:3, 1Co_3:11-15, 1Co_5:1-5, 1Co_15:35-38, 1Co_15:39-46, Psa_49:14, Job_18:14 , Job_14:7,

### 2-2 நியாயப்பிரமாண இரட்சிப்பின் பிரமாணம் :-

நியாயப்பிரமாணம் / மனசாட்சிப் பிரமாணம் / ஜாதிகளின் பிரமாணம் / பத்து கட்டளைகள் சீனாய் மலையில் உண்டான உடன் படிக்கை
Lev_18:5, Rom_10:5, Gal_4:21-25, Gal_4:26-31,Gal_3:20, 1Ti_1:9-11, Eze_20:25,

### 2-3 நியாயப்பிரமாணத்தில் சாட்சியிருக்கிற மூலக் காரணிகள் :-

நியாயப்பிரமாணத்தின் மூலம் நன்மை + தீமைகள் இருதயத்தில் சாட்சியிருக்கிறது.

மனசாட்சியின் மூலம் குற்றமுண்டு + குற்றமில்லை என்று இருதயத்தில் சாட்சியிருக்கிறது.

Rom_2:14-15, Rom_2:27,Rom_7:7-13, Deu_30:14-15 , Mic_6:8-9,

### 2-4 நியாயப்பிரமாணம் இருதயத்தில் சாட்யிருக்கிற படியால் வெளிப்பட்ட நன்மைகளின் கிரியைகள்:-

நியாயப்பிரமாணம் இருதயத்தில் சாட்யிருக்கிற படியால், நியாப்பிரமாணத்தின் மூலம் வருகிற சுய நீதியினால் மனுஷர்களுக்கு முண்பாக நீதிமான், ஆனால் இது தேவனுக்கு முன்பாக நீதிமான் அல்ல.

நியாயப்பிரமாணம் ஒரு பள்ளி ஆசிரியராக இருந்து கொண்டு கிறிஸ்துவின் விசுவாச நீதிக்கு வழி நடத்துகிறது.

Gal_2:15, Gal_3:10-12,Gal_3:19-25, Rom_3:19-22, Phi_3:9-11,

**2-5 நியாயப்பிரமாணம் வாயினால் சாட்சியிருக்கிற படியால் வெளிப்பட்ட தீமைகளின் கிரியைகள் :-**

நியாயப்பிரமாண வார்த்தைகளை வாயினால் சாட்யிடு கிறவர்களுக்கு, நியாயப்பிரமாணத்தினுடைய நீதியின் கிரியைகள் இல்லாமலிருந்து; பாவத்தினால் ஆவி, ஆத்துமாவில் மரணம் ஏற்பட்டு, நியாயப்பிர மாணத்தின் சாபங்கள் அவர்களை பின் தொடருகிறது

Gal_3:10, Rom_2:6-12, Rom_2:17-24,Rom_2:25-29, Rom_7:5, Rom_7:14-25,Eph_2:1-3,

**2-6 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொள் ளும் வழி முறைகள் :-**

நியாயப்பிரமாணத்தின் மூலம் வெளிப்பட்ட தீமைகளை நன்மையினால் ஜெயங்கொண்டு கரும பாவங்களை ஜெயங் கொள் ளுவது / கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் பாவத்தை, மாம்சத்திலே பலி செலுத்துவதால் நியாயப்பிரமாண நிதியை நிறை வேற்றுவது.

Rom_8:1-4, Rom_8:5-11, Rom_10:5,Lev_18:5, 1Pe_3:16-18, 1Pe_4:16, 2Pe_2:19, Rom_2:25-29,

**2-7 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொண்ட வர்களின் பிரதிபலன்கள்:-**

ஆவி, ஆத்துமா இரண்டாம் மரணமாகிய அக்கினி நரகத்தி லிருந்து விருதலையாக்கப்படுகிறது ஆனால் சரீரம் முதலாம் மரண மாகிய பாதாளத்தின் வல்லமைகளை ஜெயங்கொள்ள முடியாத

படியால் சரீரம் தேவனுடைய ரூபத்திலும் சாயலிலும் மரணமடைந்து, மிருக சாயலை பெற்றுக் கொள்ளுகிறது

1Co_5:1-5, 1Co_15:35-38,1Co_15:39-44, Mat_6:25, Psa_49:14 , Job_18:5-14, Job_18:15-21,

### 2-8 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொள்ளாதவர்களின் பிரதிபலன்கள் :-

மனச்சாட்சிப் பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தை கைக் கொள்ளாதபடியால், பாவம் இவர்களை ஜெயங்கொள்ளுகிறது, இதனால் ஆவி, ஆத்துமா, சரீரம் மரணமடைகிறது; இவர்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்த கமும் எரிகிற அக்கினி கடலில் தள்ளப்படுகிறது.

Rom_2:11-12, Rom_5:20-21, Gal_3:10, Heb_10:28, Jam_2:8-13, Jam_4:11-12,

## அத்தியாயம் மூன்று

கிறிஸ்துவின் விசுவாச தேவ நீதியினுடைய இரட்சிப்பின் விசுவாச அளவுப் பிரமாணமும் கிரியைகளும்

### பொருளடக்கம்

3-1 கிறிஸ்துவின் விசுவாச தேவ நீதியின் மூலம் வருகிற இரட்சிப்பு

3-2 கிறிஸ்துவின் விசுவாச தேவ நீதியினுடைய இரட்சிப்பின் விசுவாச அளவுப் பிரமாணம்

இடறிவிழுந்தும் கீழ்படியாமலிருந்த தன் சொந்த ஜனமாகிய சுபாவ ஒலிவ மரக்கிளையான யூதர்களை தேவன் தப்பவிடாமல் வெட்டும் போது, இடறிவிழுந்தும் கீழ்படியாமலும் இருக்கிற காட்டொழிவ மரமாகிய கிறிஸ்தவர்களையும் தேவன் தப்ப விடாமல் வெட்டுவார்; ஆகையால் கிறிஸ்தவர்கள் முன் எச்சரிப்புடன் ஜாக்கிரதையாக இருந்து கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்களுக்கு தேவனுடைய முன் எச்சரிப்புடன் மூன்றாவது நியாயத்தீர்ப்பின் செய்தி.

கிறிஸ்துவின் முதலாம் வருகையில் தேவனால் வெட்டப்பட்ட சுபாவ ஒலிவமரக்கிளையாகிய யூதர்களை, தேவன் மீண்டும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் சுபாவ ஒலிவமரத்துடன் ஒட்ட வைக்கும்போது ; காட்டொழிவ மரமாகிய கிறிஸ்தவர்களில் இடறி விழுந்தவர்களையும், கீழ்படியாதவர்களையும் தேவன் தப்பவிடாமல் சுபாவ ஒலிவ மரத்திலிருந்து வெட்டி எடுத்து, அவர்களை காட்டிலே எறிந்து விடுவார்/ கிறிஸ்தவர்களும் புறஜாதிகளாகவே மதிக்கப்படுவார்கள். Rom_11:16-18, Rom_11:19-22,

6-11 கிறிஸ்துவின் முதலாம் வருகையில் முன்மாரி மழையின் மூலம் பிதாவின் வாக்குத்தத்மான பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்ட பிறகு, தேவனை விட்டு பின்வாங்கிப் போகிறவர் களுக்கு, தேவன் அவர்களுக்குள்ளே பொய்யின் ஆவிகளையும், வஞ்சிக்கிற ஆவிகளையும் அனுப்பி, அவர்கள் தேவனிடம் மனந்திரும்பும் வரை, அவைகளுக்கே அடிமையாகும் படி ஒப்புக்கொடுக்கிறார். 2Th_2:1-4, 2Th_2:7-12, 2Th_2:13-17,

6-12 கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கிற / வருகிற வாக்குத்தத்தம், கிறிஸ்துவின் விசுவாசத்தை பின் பற்றுகிற சந்ததிக்கு அளிக்கப்படும் வரை/ வருமளவும்; வேதம் எல்லாரையும் இஸ்ரவேலரையும் புறஜாதிகளையும் ஏகமாய் பாவத்தின் கீழ் அடைத்து, நியாயப்பிரமாணத்தின் காவலில் வைத்திருந்து, கிறிஸ்துவின் முதலாம் வருகையில் கிறிஸ்துவின் விசுவாச சந்ததிக்கு பிதாவின் வாக்குத்தத்தை கொடுக்கிறது. Gal_3:19-24,

**7-0 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவனுடைய இரட்சிப்பு ஆவிக்குரிய யூதர்கள் மூலமாக வெளிப்படுகிறது :-**

7-1 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இயேசு கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகள் சிலுவையில் அறையப்பட்டு

உயிர்த்தெழுந்து மகிமையடைந்த படியால், அவைகள் இரட்சிப்பின் அதிபதியான கிறிஸ்துவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்கிறது. Hos_6:1-4, 2Sa_23:3-4, Deu_32:2, Isa_55:10-11, Psa_90:4, 2Pe_3:8, Joh_12:32, Luk_24:1-7, Isa_8:18-22, Isa_29:1-4, Rev_5:1-7, Rev_3:1,

1 தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிற இரட்சிப்பின் நற்செய்தி

1. வேதம் 2. சாட்சிகள் 3. வழிகள் 4. கட்டளைகள் 5. பிரமாணங்கள் 6. கற்பனைகள் 7. நீதி நியாயங்கள் / நியாயத்தீர்ப்புகள்; ஆகிய இந்த ஏழு வகையான வார்த்தைகளில் வெளிப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளாகவும், இருளில் பிரகாசிக்கிற ஏழு விடி வெள்ளி நட்சத்திரங் களைப்போல உள்ள தேவனுடைய வார்த்தைகளை, தம்முடைய தூதர்களாக அனுப்புகிறவர் சொல்லுகிற இரட்சிப்பின் நற்செய்தி Rev_1:4-5, Rev_4:5, Rev_5:6, Zec_3:9, Zec_4:10, Psa_12:6, Rev_1:20, 2Pe_1:19, Job_38:12-13, Joh_1:1-5, Joh_12:34-36, Isa_55:10-11, Mat_23:28, Luk_16:15, Joh_21:6,

2 தேவனுடைய ஏழு ஆவிகளின் மூலம் வெளிப்பட்ட தேவனு டைய ஏழு பிரமாணங்கள்; கிறிஸ்துவின் சரீரமான மண் குகையில் பரிசோதிக்கப்பட்டு உண்மையான சாட்சியை பெற்று, இருளில் பிரகாசிக்கிற ஏழு நட்சத்திரங்களைப் போலவும், தேவனுடைய ஏழு கண்களின் ஒளியாகவும், பரிமாண வளர்ச்சியடைந்து, பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது.

3 கிறிஸ்துவாகிய மூலைக்கல்லின் பரிமாணத்தில் வெளிப் படுகிற ஏழு புள்ளிகள் தேவனுடைய ஏழு கண்களாக பிரதி பலிக்கிறது. Zec_4:7-10,

4 தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் வெளிப்பட்ட வானவில்லின் வெளிச்சத்தினுடைய பரிமாணத்தில் வெளிப்படுகிற ஏழு நிறங்கள் தேவனுடைய ஏழு கண்களாக பிரதி பலிக்கிறது. Gen_9:8-17,

5 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட ஜீவ சுவாசத்தின் பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதனுடைய ஜீவாத்துமாவின் ஏழு செயல்பாடுகள், தேவனுடைய ஏழு கண்களைப் போல பிரதி பலிக்கிறது

6 வடக்கிலுள்ள சீயோன் பர்வதத்திலிருந்து வெளிப்படுகிற வெளிச்சத்தின் பரிமாணங்களில் ஏழு திசைகள் தேவனுடைய ஏழு கண்களாக பிரதிபலிக்கிறது. Eze_9:1-2, Jer_47:2, Psa_48:2, Job_37:21-22, Psa_74:2, Psa_75:6, Job_35:13-16,

7 தேவனுடைய வாயிலிருந்து வெளிப்படுகிற வசனங்களின் சத்தம், பரிணாம வளர்ச்சியின் மூலம் சங்கீத சுரமண்டலத்தின் ஏழு இராகங்களாக வெளிப்பட்டு, தேவனுடைய ஏழு கண்களாக பிரதிபலிக்கிறது. Psa_49:4, Psa_92:2-3,

8 தேவனுடைய வாயிலிருந்து வெளிப்படுகிற வசனங்களின் விசுவாசங்கள் /கருத்துக்கோட்பாடுகள், சுரமண்டலத்தின் ஏழு இராகங்களைப் போல,தேவனுடைய ஏழு பிரமாணங்கள் வெளிப்பட்டு, தேவனுடைய ஏழு கண்களைப் போல பிரதிபலிக்கிறது. Psa_19:1-10, Psa_119:1-8,

9 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட இரகசியங்கள், சுரமண்டலத்தின் ஏழு இராகங்களைப் போல, ஏழு வகையான உவமை மொழிகளில் வெளிப்பட்டு,தேவனுடைய ஏழு கண்களாக பிரதிபலிக்கிறது

7-2 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவதற்காக கிறிஸ்தவர்களுக்குள்ளே ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்கிற ஆவிக்குரிய யூதர்கள், முதலாவது தேவனால் தெரிந்து கொள்ளப்படுகிறார்கள். Zec_10:1-5, Zec_12:7-10, Zec_12:1-6, Num_23:8-9, Num_23:18-24, Num_24:5-9, Isa_37:30-32, Eze_21:1-7, Eze_21:8-17,

7-3 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கிறிஸ்தவர்களுக்குள்ளே ஓய்வு நாள் பிரமாணத்தை பரிசுத்தமாக ஆசரிக்கிற ஆவிக்குரிய யூதர்கள், எருசலேமாகிய கர்த்தருடைய வசனங்களில் காத்திருந்து முன்மாரி மழையின் மூலம் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்ட பிறகு; பின்மாரி மழையின் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளுவதற்காக, சீயோனாகிய தேவனுடைய பிரமாணங்களில் காத்திருந்து அபிஷேக ஆவியை பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

Luk_24:46-49, Act_1:4-5, Act_1:12,Act_2:1, Isa_2:1-4, Mic_4:1-3, Jer_50:4-8, Zec_8:20-23, Joh_14:26-27, Joh_16:7-8, 1Co_2:12-16, Isa_34:16-17, 1Co_14:5-6, Act_1:8, 1Co_12:4-11, Rom_12:2-8, Eph_4:11-13, 1Pe_4:10-11, Act_2:14-21, Joe_2:28-32, Joe_2:17-18, Joe_2:1-2,

7-4 கிறிஸ்தவர்களுக்குள்ளே இருக்கிற ஆவிக்குரிய யூதர்களுடைய அடையாளங்களை வெளிப்படுத்தும் நான்கு பலிபீடத்தின் ஆராதனை முறைகள். Zec_1:18-21, Zec_11:7-13, Zec_11:14-17,

1 தேவனுடைய கட்டளையின்படி இஸ்ரவேல் ஜனங்கள் யோர்தான் நதியை கடந்த பின்பு வாக்குத்தத்த தேசத்திலே பன்னிரெண்டு கல்லுகளை நாட்டி அவைகளில் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை எழுதி; ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் கூறின இடத்தில் பிள்ளைகளுக்கு / பின் சந்ததிக்கு அடையாளமாக கட்டப்பட்ட பலிபீடம். (இந்த இடத்தில் யூதருடைய

அடையாளங்கள் பாதுகாக்கப்படுகிறது.)Deu_27:1-10, Deu_28:1-10, Deu_29:1-14, Deu_30:1, Jos_4:1-9, Psa_78:1-5, Psa_78:6-11,

மனிதர்களுடைய சுய ஆலோசனைப்படி தாங்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்யத்தக்கவர்கள் என்பதை தங்களுடைய பிள்ளைகளுக்கு / பின் சந்ததியாருக்கு அறிவிக்கும் படியாக; நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் இல்லாமலும், அதன் தொடர்புடைய ஆசீர்வாதங்களும் சாபங்களும் உள்ளடங்கிய தேவனுடைய வார்த்தைகள் இல்லாமலும், மற்றவர்களுடைய பார்வைக்கு மட்டும் பெரிதாக காட்சியளிக்கும்படியாக கட்டப்பட்ட பெரிய பலிபீடம் (இந்த இடத்தில் யூதருடைய அடையாளங்கள் சிதறடிக்கப் பட்டது)

Num_32:1-5, Num_32:17-24, Jos_22:1-8, Jos_22:9-14, Jos_22:15-20, Jos_22:21-28, Jos_22:29-33,

2 எருசலேமிலே வாசம் பண்ணின இளைய தலைமுறையினர் தேவனுடைய ஆலோசனைகளிலும் பிரமாணங்களிலும் கண்டிப்பாக இருந்து, எருசலேம் ஆலய பலிபீடத்தில் தேவனுக்கு பலிசெலுத்தி ஆராதித் தார்கள் (இந்த இடத்தில் யூதருடைய அடையாளங்கள் பாதுகாக்கப் பட்டது.) 2Ch_10:1-11, 2Ch_10:12-19, 2Ch_11:1-4, 1Ki_12:1-11, 1Ki_12:12-19, 1Ki_12:20-24,

இஸ்ரவேலின் பத்து கோத்திரத்திலுள்ள முதியோர்களின் ஆலோசனைப்படி, தாவீதின் வம்சத்தை விட்டு பிரிந்து சென்று, மனிதர்களுடைய சுய ஆலோசனையின் படி உருவாக்கப்பட்ட இரண்டு கன்றுக்குட்டிகளை வணங்கி, மேடைகளில் ஆராதனை செய்து வந்தார்கள். (இந்த இடத்தில் யூதர்களுடைய அடையாளங்கள் சிதறடிக்கப்பட்டது) 2Ch_11:13-17, 2Ch_13:8-12, 1Ki_12:25-33, 2Ki_17:13-19, 2Ki_17:20-23,

3 இஸ்ரவேலின் பத்து கோத்திரங்கள் சிறையிருப்புக்கு சென்றபோது, சமாரியாவிலே குடியிருந்து ஜனங்களில் ஈனமானவர்களை ஆசாரியர்களாக நியமித்து, கர்த்தருக்கு பயந்தும்,

தாங்கள் விட்டு வந்த ஜாதிகளின் முறைமைகளை பின்பற்றியும், மேடைகளை கட்டி ஆராதனை செய்து வந்தார்கள் (இந்த இடத்தில் யூதர்களுடைய அடையாளங்கள் சிதறடிக்கப்பட்டது.) 2Ki_17:21-27, 2Ki_17:28-34, 2Ki_17:35-41, Lev_18:1-5,

4 எருசலேமிலுள்ள ஆலய பலிபீடத்தில் ஜாதிகளுடைய ஆசரிப்பு முறைகளை கொண்டு வந்து தேவனுக்கு ஆராதனை செய்து வருகிறார்கள் (இந்த இடத்தில் யூதர்களுடைய அடையாளங்கள் சிதறடிக்கப்பட்டது) Eze_9:1-4, Eze_9:5-11, Eze_11:1-6, Eze_11:7-12, Eze_11:13-21, Eze_5:5-11,

7-5 மனிதன் தன்னுடைய கிரியைகளை நிறைவேற்றுவதற்காக மாடு மற்றும் கழுதைக்கு கடிவாளம் போடுவது போல தேவனும் கிறிஸ்தவர்களுக்குள்ளே இருக்கிற தேவனால் முன் குறிக்கப்பட்ட ஆவிக்குரிய யூதர்களுடைய அறிவிலும் புத்தியிலும் கடிவாளம் போட்டு தேவனுடைய இரட்சிப்பின் ஊழியங்களை நிறைவேற்றுகிறார்.

1)Isa_1:3, Zec_10:1-5, Psa_39:1-5, Psa_32:8-11, Pro_26:3, 1Co_9:7-10, 1Ti_5:18, Deu_25:4, Jas_3:1-5, 2)Luk_13:15-17, Luk_14:1-6, 3)Gen_49:8-12, Mat_21:1-5, Joh_12:14-16, Zec_9:9,

4)Act_2:1-8, Act_2:14-21, 1Co_12:4-12, 5),Joh_6:37-39, Joh_6:40, Joh_6:44-45, Joh_6:54, 6) Isa_30:19-24, Isa_32:15-20, Jdg_5:9-11, Job_36:27-33, Job_29:21-25, Job_28:20-28, Job_28:12-19,

7)Isa_1:3, Hos_8:8-12, Jer_2:20-25, Jer_14:1-6, Jer_31:15-20, Isa_32:9-15, Job_11:11-16, Job_39:5-8 , Job_6:5-6, Psa_104:10-11, Job_24:1-6, Pro_7:19-24, Isa_7:21-25, Job_30:11,

8)Dan_5:20-21, Dan_4:19, Dan_4:24-27, Dan_4:28-33, Dan_4:34-37, Amo_4:1-3, Isa_30:27-33, Isa_37:28-35, 2Ki_19:28-34, Eze_38:1-9, Eze_39:1-7,

7-6-0 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவனுடைய இரட்சிப்பின் ஊழியங்களை நிறைவேற்றுவதற்காக; கிறிஸ்தவர் களுக்குள்ளே இருக்கிற தேவனால் முன் குறிக்கப்பட்ட ஆவிக்குரிய யூதர்களுடைய அறிவிலும் புத்தியிலும், தேவன் கடிவாளம் போட்டு கட்டினபடியால், அவர்களுடைய இருதய சிந்தனைகளிலும் கிரியைகளிலும் தினந்தோறும் புதிய விடியக்காலத்து வெளிச்சம் போல, பல தேவ தரிசனங்கள் கீழே குறிப்பிட்ட பல வழிகளில் வெளிப்படுகிறது.

7-6-1 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறபோது இருளிலே வெளிச்சம் பிரகாசிக்கிறது. Hos_6:1-3, Joh_1:1-5, Joh_3:19-21, 2Pe_1:19, Isa_50:10-1, Job_38:12-13,

7-6-2 கிறிஸ்துவின் மூல உபதேச வசனங்களின் நன்மை தீமைகளை பகுத்தறிகிறபோது இருதயத்தில் தேவ நீதியின் வசனம் வெளிச்சமாக வெளிப்படுகிறது. Heb_6:1-2, Heb_5:12-14,Rom_9:4, Rom_3:1-2,

7-6-3 தேவனுடைய கற்பனைகளின்படி நடக்கிறபோது நற்கிரியைகளினால் வாழ்க்கையில் வெளிச்சம் பிரகாசிக்கிறது. Isa_60:1-9, Isa_60:9-14, Isa_51:3-5, Mic_4:1-4, Isa_2:1-6, Joh_7:18-19, Joh_12:43,

7-6-4 கிறிஸ்துவின் வார்த்தைகளின் மூலம் மனந்திரும்பின பின்பு நீதியின் கிரியைகளை செய்கிறபோது வாழ்க்கையில் வெளிச்சம் பிரகாசிக்கிறது. Mat_6:16-18, Isa_58:5-10, Isa_58:11-14,

7-6-5 கிறிஸ்துவின் வார்த்தைகளின் மூலம் நேரடியாக நீதியின் கிரியைகளை செய்கிறபோது வாழ்க்கையில் வெளிச்சம் பிரகாசிக்கிறது. Mat_5:14-16, Mat_6:21-23, Luk_8:16-18, Luk_11:33-36, Luk_12:32-37, Rev_2:5,

7-6-6 தேவனுடைய ஆலோசனைகளை அனு தினமும் சிந்தித்து, தியானிக்கிறவர்களுடைய இருதயத்தில் வெளிச்சம் பிரகாசித்து வார்த்தைகளாக வெளிப்படுகிறது. Gen_6:8-9, Mal_2:5-9, Jer_23:18-24, Jer_23:25-32, 1Co_2:4-10, 1Co_2:11-16, Isa_64:4-14,

7-6-7 ஒரு குறிப்பிட்ட வசனத்தின் தொடர்பில், நியாயப் பிரமாணத்தையும் தீர்க்க தரிசனங்களையும் சிந்தித்து தியானிக்கும் போது, தேவ நீதியின் வசனம், இருதயத்தில் புதிய வெளிச்சமாக வெளிப்படுகிறது. Rom_3:20-22, Rom_10:6-11, Deu_30:11-16, Deu_30:17-20, 1Jo_4:1-6, 2Jo_1:7-11,

7-6-8 ஒரு குறிப்பிட்ட வசனத்தின் தொடர்பில் நியாயப் பிரமாணத்தையும் அவைகள் இயேசு கிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றப் பட்ட சாட்சியின் வசனத்தையும் சிந்தித்து தியானிக்கும் போது இருதயத்தில் புதிய விடியக்காலத்து வெளிச்சம் வெளிப்படுகிறது. Isa_8:16-20, Isa_41:21-29, Joh_10:34-36, Dan_5:12-17, Psa_82:1-8, Psa_75:1-10, Son_6:9-10,

7-7 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கிறிஸ்தவர்களுக்குள்ளே இருக்கிற தேவனால் முன் குறிக்கப்பட்ட ஆவிக்குரிய யூதர்கள்; முன்மாரி மற்றும் பின்மாரி மழையின் ஆசீர்வாதங்களினால் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுத்த ஊழிய அழைப்பின் மூலம் ஆவியில் பெலனடைந்து, முதலாவது எருசலேமாகிய கர்த்தருடைய வசனங்களிலும், இரண்டாவது யூதேயாவாகிய தேவனுடைய ஆசரிப்பு முறைகளுடைய சுத்திகரிப்பிலும், மூன்றாவது சமாரியாவாகிய கிறிஸ்தவர்களிடத்திலும், நான்காவது பூமியின் கடைசி வரை பரவியிருக்கிற புற ஜாதிகளிடத்திலும் சாட்சியாக இருக் கிறார்கள். Act_1:4-5, Act_1:12, Act_2:1, Isa_2:1-4, Mic_4:1-3, Jer_50:4-8, Zec_8:20-23, Act_1:8, 1Co_12:4-11, Rom_12:2-8, Eph_4:11-13, 1Pe_4:10-11,

7-8 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கிறிஸ்தவர்களுக்குள்ளே இருக்கிற ஆவிக்குரிய யூதர்கள்; முன்மாரி மற்றும் பின்மாரி மழையின் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்ட படியால், அவர்கள் மூலம் எழுத்தின் படியுள்ள யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், புறஜாதிகளுக்கும் தேவனுடைய இரட்சிப்பு வெளிப்படுகிறது. Gal_2:7-10, Rom_9:30-33, Rom_11:11, Rom_11:16-18, Rom_11:19-22, Joh_1:11-13, Joh_4:22-25,

7-9 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கிறிஸ்தவர்களுக்குள்ளே இடறிவிழுந்தும், கீழ்படியாமலும் இருக்கிறவர்களை தேவன் தள்ளினாலும் /சுபாவ ஒலிவ மரத்திலிருந்து காட்டொழிவ மரக்கிளையாகிய கிறிஸ்தவர்களை தேவன் வெட்டினாலும், அவர்களுக்குள்ளே, யாராவது? கிறிஸ்துவின் விசுவாசத்தினால் தேவ நீதியின் பிரமாணத்தை தேடுகிற ஆவிக்குரிய யூதர்கள் இருந்தால், அவர்களை தேவன் கண்டறிந்து, அவர்கள் மூலமாக தேவனுடைய இரட்சிப்பு, எழுத்தின் படியுள்ள யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும், புறஜாதிகளுக்கும் வெளிப்படுகிறது. Gal_2:7-10, Rom_9:30-33, Rom_11:11, Rom_11:16-18, Rom_11:19-22, Joh_1:11-13, Joh_4:22-25,

7-10 மோசே தீர்க்க தரிசியின் மூலம் லேவியர்களுக்கு தேவன் கிருபையாக கொடுத்த தேவனுடைய ஊழிய அழைப்புகள்; கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கிறிஸ்தவர்களிடமிருந்து நீக்கப்பட்டு, தேவனுடைய இராஜ்ஜியத்திற்கேற்ற கனிகளை கொடுக்கிற ஆவிக்குரிய யூதர்களுக்கு கொடுக்கப்படுகிறது. Heb_10:19-25, Heb_7:11-14, Num_18:6-7, Mat_10:40-42, Luk_20:9-16,

7-11 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் எழுத்தின் படியுள்ள கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் மூலம் தேவ நீதியின் பிரமாணத்தை தேடாமல், பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடுகிறபோது; கிறிஸ்துவாகிய மூலைக்கல்லில் / மூல உபதேசத்தில்

இடறி விழுந்து, இவர்களுடைய இரட்சிப்பு மரணமடைகிறது. இவர்கள் கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம் மீண்டும் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக் கொள்ளும் நாள் வரை தேவனுடைய சாபங்கள் இவர்களை தொடருகிறது. Rom_9:30-33, 1Pe_2:6-8, Rom_11:7-11,

7-12 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் இடறி விழுந்த காட்டொழிவ மரமாகிய கிறிஸ்தவர் களையும் / லேவியர்களையும் சுபாவ ஒலிவ மரத்திலிருந்து வெட்டி எடுத்து, வெட்டப்பட்ட அந்த இடத்தில் சுபாவ ஒலிவ மரக்கிளையாகிய இஸ்ரவேலரையும் / யூதர்களையும் தேவன் மீண்டும் ஒட்ட வைக்கிறார். இப்பொழுது காட்டொழிவ மரமாகிய கிறிஸ்தவர்களை புற ஜாதிகளைப்போல காட்டிலே எரிந்து விடுகிறார் / அவர்கள் புற ஜாதிகளாகவே மதிக்கப்படுவார்கள். Rom_11:19-22, Rom_11:23-32,

7-13 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் சுபாவ ஒலிவ மரங்கிளையாகிய ஆவிக்குரிய யூதர்களை தேவன் மீண்டும் அங்கிகரிக்கும் போது, இரட்சிப்பின் நற்செய்தியுடன் புது உடடன்படிக்கையினால் முற்பிதாக்களின் ஆசீர்வாதங்களும் மரித்தோரின் உயிர்தெழுதலைப்போல வெளிப்படுகிறது.

சுபாவ ஒலிவ மரக்கிளையாகிய யூதர்களை தேவன் தள்ளி விடுதல் உலகத்தை ஒப்புரவாக்கும்போது; அவர்கள் மீண்டும் தேவனால் அங்கிகரிக்கப்படுகிறது மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானது போல இருக்கிறது.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் காட்டொழிவ மரமாகிய கிறிஸ்தவர்களின் கீழ்படியாமையினாலே வெட்டப்படும் போது, கிறிஸ்து வின் முதலாம் வருகையில் வெட்டப்பட்ட சுபாவ ஒலிவ மரக்கிளையாகிய யூதர்களை சொந்த ஜனங்களை தேவன் மீண்டும் ஒட்ட வைப்பார் /அங்கிகரித்து பிதாக்களின் ஆசீர்வாதங்களை நிறைவேற்றுவாார்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் சுபாவ ஒலிவ மரக்கிளையாகிய யூதர்களை தேவன் மீண்டும் சுபாவ ஒலிவ மரத்துடன் ஒட்ட வைக்கும் போது / தெரிந்து கொள்ளும் போது, அவர்கள் முற்பிதாக் களின் நிமித்தம் அன்பு கூரப்பட்டவர்களாக இருக்கிறபடியால் தேவன் அவர்களுடைய அவ பக்தியை அவர்களை விட்டு விலக்கி, அவர்களுடைய பாவங்களை மன்னித்து, மீண்டும் அவர்களுடன் புது உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். Rom_11:23-32, Jer_31:31-34, Jer_32:38-40; Heb_8:8-12, Heb_10:16-22,

7-14 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பெந்தெகொஸ்தே என்னும் ஆத்துமா அறுவடை பண்டிகை வந்தபோது, கிறிஸ்துவின் விசுவாசத்தை ஏற்றுக்கொண்ட ஒரு ஆவிக்குரிய யூதனுடைய வஸ்திரத்தை /நீதியின் கிரியைகளை பிடித்துக் கொண்டு பத்து புற ஜாதிகள் / கிறிஸ்தவர்கள் தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடே கூட நாங்களும் கர்த்தரின் பர்வதத்திற்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்திற்கும் போவோம் வாருங்கள் என்று சொல்லிக் கொண்டு எருசலேமாகிய கர்த்தருடைய வசனங்களுக்கும் சீயோனாகிய தேவனுடைய பிரமாணங்களுக்கும் வந்து சேருவாார்கள். Act_1:4-5, Act_1:12, Act_2:1, Isa_2:1-4, Mic_4:1-3, Jer_50:4-8, Zec_8:20-23,

7-15 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவன் எங்களோடே இருக்கிறார் என்று சொல்லுகிற யாக்கோபின் வம்சத்தார் / கிறிஸ்தவர்கள் தாங்களே பரிசுத்த நகரத்தார் என்று சொல்லிக்கொண்டு, தங்களுடைய பட்டயத்தை மண்வெட்டியாக மாற்றியமைத்துக் கொள்ளாமலும் தங்களுடைய ஈட்டியை அறிவாளாக மாற்றியமைத்துக் கொள்ளாமலும், முரட்டாட்டம் பண்ணி; எருசலேமாகிய கர்த்தருடைய வார்த்தைகளுக்கும், சீயோனாகிய தேவனுடைய பிரமாணங்களுக்கும் வராமல் இருக்கிறவர்களை தேவன் கை விட்ட படியால், அவர்கள் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட இரட்சிப்பு மரணமடைகிறது. மேலும் இவர்கள் மீண்டும் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக்

கொள்ளும் நாள் வரை, தேவனுடைய சாபங்கள் இவர்களை தொடருகிறது.

Isa_8:5-16, Isa_48:1-2, Isa_58:1-2,Isa_2:1-6,Isa_28:15-19, Mat_1:23, Mic_3:10-11, Amo_5:14, Jer_8:8, Jer_14:9-10, Jer_18:9-10, Jer_23:16-17, Amo_9:10, Eze_11:3-12, Eze_11:13-21,

7-16 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பத்து புற ஜாதிகள் / கிறிஸ்தவர்கள் தங்களுடைய பட்டயத்தை மண்வெட்டியாக மாற்றியமைத்துக் கொள்ளுவதின் பொருள் :-

இருபுறமும் கருக்குள்ள தேவ வசனமாகிய பட்டயத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் மற்றவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறது போல; அவைகளை தங்களுடைய வாழ்க்கையிலும் ஏற்றுக்கொண்டு மனந்திரும்புகிற போது, அவைகள் மண்வெட்டியின் உபயோகம் போல தங்கள் முன்னேற்றத்திற்காக நீதியின் கிரியைகளை விதைக்கிறார்கள்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பத்து புற ஜாதிகள் / கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஈட்டியை அறிவாளாக மாற்றியமைத்துக் கொள்ளுவதின் பொருள் :-

ஈட்டியைப் போல கசப்பான வார்த்தைகளை பேசுகிறவர்கள், அவைகளை விட்டு மனந்திரும்புகிறபோது, அவர்கள் தங்களுடைய நற்கிரியைகளின் ஆசீர்வாதங்களை அறுத்து புசிப்பார்கள். Isa_2:1-4, Mic_4:1-3, Jer_50:4-8, Zec_8:20-23,

7-17 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கிறிஸ்துவின் விசுவாச தேவ நீதியினால் பலிக்கிற / வருகிற ஆவி, ஆத்துமா, சரீர மீட்பாகிய தேவனுடைய புத்திர சுவிகார மகிமையின் சுயாதீனத்தை பெற்றுக் கொள்ளுகிற சந்ததிக்கு அளிக்கும்படியாக; வேதம் எல்லாரையும் யூதர்களையும் இஸ்ரவேலர்களையும் / கிறிஸ்தவர்களையும் / லேவியர்களையும் ஏகமாய் பொய்யின் கீழ்

அடைக்கலமாக்கி மாயையின் கீழ் / மாய்மாலத்தின் மறைவிடத்தின் கீழ் காவலில் வைத்திருக்கிறது./ நீதிப்பிரமாணத்தை பின்பற்றுகிற சந்ததி வரும் வரை, வேதம் எல்லாரையும் ஏகமாய் மாயையின் காவலின் கீழ் வைத்திருக்கிறது. Rom_8:19-23, 2Co_5:1-10, Isa_28:14-15, Isa_5:18-25, Isa_8:5-15, Isa_7:1-9, Isa_30:27-28,

7-17-1 நீதிப்பிரமாணம் ஒரு தலைமை ஆசிரியர் :-

நீதிப்பிரமாணத்தை கிறிஸ்து நிறைவேற்றுகிற படியால் நீதிப்பிரமாணத்தின் நீதியானது, பொய்யின் கீழ் அடைக்கலமாக்கப் பட்டு மாயையின் மறைவிடத்தின் கீழ் காவலில் இருந்த நம்மை விடு தலையாக்கி, கிறிஸ்துவின் விசுவாசத்தினால் வருகிற சரீர மீட்பாகிய தேவனுடைய புத்திர சுவிகார மகிமையின் சுயாதீனத்தை பெற்றுக் கொள்ளுதவதற்கு வழி நடத்துகிற ஒரு தலைமை ஆசிரியராக இருக்கிறது.

7-17-2 கிறிஸ்து ஒரு தலைமை ஆசிரியர் :-

கிறிஸ்துவின் விசுவாச நீதிப்பிரமாணத்தை கிறிஸ்து நிறைவேற்றுகிறபடியால், கிறிஸ்து ஒரு தலைமை ஆசிரியர்.

கிறிஸ்து நியாயப்பிரமாண நீதியை தன் சரீரத்தில் நிறை வேற்றின பின்பு, கிறிஸ்துவின் ஆவி, ஆத்துமா உயிர்ப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவின் விசுவாச நீதிப்பிரமாணத்தின் நீதிக்கிரியைகளை நிறை வேற்றுவதற்காக, பாதாளத்தில் / பூமியின் தாழ்விடங்களில் இறங்கி, சிறைபட்டவர்களை சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்து, உன்னதத்திற்கு ஏறினார்; கிறிஸ்துவை தலையாகப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குக்குத்தக்க பூரண புருஷராக எல்லாவற்றிலும் / நீதிப்பிரமாணத்தின் விசுவாசத்திலும், கிரியைகளிலும் கிறிஸ்துவை பின்பற்றி, வளர்கிறவர்களாக இருக்கும் படி அப்படி செய்தார். Rom_8:2-4, 1Pe_3:18-19, 1Pe_4:5-11, Eph_4:7-16, Psa_68:18, Isa_42:6-7,

7-17-3 கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகள் இருதயத்திற்கு சமீபமாக இருக்கும்போது, அவைகள் பாதாளமாகிய இருதயத்திற்கு இறங்கி சென்று நீதிப்பிரமாணத்தை பிரசங்கிக்கிறது :-

கிறிஸ்து நியாயப்பிரமாண நீதியை தன் சரீரத்தில் நிறை வேற்றின போது, கிறிஸ்துவின் ஆவி, ஆத்துமா உயிர்ப்பிக்கப்பட்டது போல, தங்களுடைய சரீரத்தில் நியாயப்பிரமாண நீதியை நிறைவேற்றுகிறபோது, தங்களுடைய ஆவி, ஆத்துமாவில் உயிர்ப் பிக்கப்பட்டவர்கள்; கிறிஸ்துவின் நீதிப்பிரமாணத்தை நிறைவேற்று வதற்காக, தேவனுடைய வார்த்தைகளை தங்கள் இருதயத்திற்கு சமீபமாக வைத்துக் கொண்டிருந்து , கிறிஸ்துவின் ஆவி, ஆத்துமா, பாதாளத்தில் இறங்கினதுபோல தங்களுடைய ஆவி, ஆத்து மாவையும் பூமிக்குரிய பாதாளமாகிய தங்களுடைய இருதயத்தில் இறங்கச் செய்து நீதியின் பிரமாணத்தை பிரசங்கிக்கிறது.

Rom_10:6-11, Deu_30:11-14, Pro_27:20, Pro_30:15-16, Hab_2:4-6,

7-17-4 கிறிஸ்து பாதாளத்தில் சிறைபட்டவர்களை விடுதலையாக்கினதுபோல, தன்னுடைய சரீர அவயவங்களை மாயைகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி, அவைகளை நீதிக்கு அடிமையாக மாற்றுவது :-

கிறிஸ்துவின் பிரசங்கத்தினால் பாதாளத்தில் பாவத்திற்கும், மரணத்திற்கும் சிறைபட்டிருந்தவர்களை கிறிஸ்து விடுதலையாக் கினதுபோல; தன்னுடைய ஆவி, ஆத்துமாவே தன்னுடைய இருதயமாகிய பாதாளத்தில் இறங்கிச் சென்று, பொய்யின் ஆவிகளுக்கும் மாயையின் ஆவிகளுக்கும் சிறைபட்டிருக்கிற தன்னுடைய சரீர அவயவங்களுக்கு நீதியின் பிரமாணத்தை பிரசங்கித்து, மனந்திருப்பி, அவைகளை நீதிக்கு அடிமையாக்கிக் கொள்ளுகிறார்கள். Rom_7:14-25, Rom_8:7-18, 2Co_5:1-10, 2Co_5:17-20, 1Co_15:46-54,

7-17-5 கிறிஸ்துவின் புத்திர சுவிகார மகிமையின் சுயா தினத்தை சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்கள், கிறிஸ்துவின் சரீர அவயவங்களாக மாறுகிறார்கள்.

பொய்யின் அடைக்கலத்திலிருந்தும் மாயையின் மறைவிடத்தின் காவலிருந்தும் விடுதலையாகுகிறவர்கள், கிறிஸ்துவின் நீதிப் பிரமாணத்தினால், ஆவியின் வரங்களைப் பெற்றுக் கொண்டு, தங்களுடைய சரீர அவயவங்களை நீதிக்கு அடிமையாகும்படி ஒப்புக் கொடுக்கிறவர்கள்; கிறிஸ்துவின் புத்திர சுவிகார மகிமையின் சுயாதினத்தை சுதந்தரித்துக் கொண்டு, கிறிஸ்துவின் சரீர அவயவங்களாக மாறுகிறார்கள்.

1Co_12:1-7, 1Co_12:8-12, 1Co_12:12-21, 1Co_12:22-31, Eph_4:11-13, Eph_4:21-32,

7-17-6 கிறிஸ்துவின் நீதிப்பிரமாணத்தை பின்பற்றாமல் மாயையின் மறைவிடத்திலே அடைக்கலமானவர்களுக்கு தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்பு Isa_28:14-15, Isa_28:16-21, Isa_30:27-28, Isa_30:8-17, Psa_2:1-12,

7-17-7 இரண்டு புகைகிற கொள்ளிக்கட்டைகளாகிய அந்திக் கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்க தரிசிகளும், அவர்கள் கட்டின மனோ இராஜ்ஜியமான மாயையின் மாளிகையும் தேவனுடைய வாதை களினால் நித்தியமாக நியாயத்தீர்க்கப்படுகிறது. Isa_7:1-9, Isa_8:5-15, Isa_30:27-28, Job_15:31-35, Eze_13:1-8, Eze_13:9-16, Eze_13:17-23, Mat_7:15-20, Mat_7:21-29, Isa_8:19-22, 1Sa_12:19-25,

7-18 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கிறிஸ்தவர்களுக் குள்ளே இருக்கிற ஆவிக்குரிய யூதர்கள், எருசலேமாகிய தேவனுடைய வார்த்தைகளிலும், சீயோனாகிய தேவனுடைய பிரமாணங்களிலும் காத்திருந்து, தங்களுடைய நெற்றியில் / அறிவில் தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களின் வசனங்களை

ஏற்றுக்கொள்ளுகிறார்கள். Isa_2:1-4, Mic_4:1-3, Jer_50:4-8, Zec_8:20-23,

7-19 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கிறிஸ்தவர்களுக்குள்ளே இருக்கிற ஆவிக்குரிய யூதர்கள் தேவனுடைய ஏழு முத்திரைகளை தங்களுடைய நெற்றியிலே / அறிவிலே பெற்றுக்கொண்டு, அவர்கள் 1,44,000 ஆண் பிள்ளைகள் வரிசையில் வந்து சேர்ந்து: மோசே மற்றும் எலியா தீர்க்கதரிசியின் ஊழிய அழைப்பை பெற்று, ஜனங்களை கர்த்தருடைய வருகைக்கு வழியை ஆயத்தப்படுத்தும் ஊழியத்தையும் ஜனங்களை கர்த்தருக்கு ஆராதனை செய்ய ஆயத்தப்படுத்தும் ஊழியத்தையும் நிறைவேற்றுகிறார்கள்.

இவைகளைக் குறித்து மேலும் அறிய **தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்** 6-2 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை தேவனால் முன் குறிக்கப்பட்ட 1.44.000 ஆண்பிள்ளைகள் கைப்பற்றும் வழி முறைகள் என்கிற தலைப்பில் பார்க்கவும்

7-20 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கிறிஸ்தவர்களுக்குள்ளே இருக்கிற ஆவிக்குரிய யூதர்கள் தேவனுடைய ஏழு முத்திரைகளை தங்களுடைய நெற்றியிலே / அறிவில் பெற்றுக்கொண்டதினால் மோசே மற்றும் எலியா தீர்க்கதரிசியின் ஊழிய அழைப்பை பெற்று; பரிசுத்த ஸ்தலத்திலே நடைபெறும் அருவருப்புகளின் நிமித்தம் பெருமூச்சு விட்டழுகிறவர்களின் நெற்றியிலே / அறிவிலே தேவனுடைய ஏழு முத்திரைகளை அடையாளம் போட்டு, தேவனுடைய வீடாகிய சபையிலே தேவனுடைய நியாயத்தீர்ப்பை துவங்குகிறார்கள்.

இவைகளைக் குறித்து மேலும் அறிய **தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்** அத்தியாயம் ஏழு 7-0 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பின் மூலம் 1.44.000 ஆண்பிள்ளைகள், ஜனங்களை கர்த்தருக்கு ஆராதனை செய்ய ஆயத்தப்படுத்தும்

ஊழியத்தை நிறைவேற்றுதல். அத்தியாயம் எட்டு 8-0 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பின் மூலம் 1.44.000 ஆண்பிள்ளைகள், ஜனங்களை கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழியத்தை நிறை வேற்றுதல் என்கிற தலைப்பில் பார்க்கவும்

7-21-0 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவனுடைய வீட்டிலே / இருதயமாகிய தேவனுடைய வீட்டிலே, தேவனுடைய முதல் நியாயத்தீர்ப்பு துவங்குகிறபோது, தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை தங்களுடைய நெற்றியில் / அறிவில் பெற்றுக்கொள்ளாதவர்களை இருதயமாகிய பாதாளத்தின் வாசல்களை மேற்கொண்டு வருகிற பொல்லாத ஆவிகள் உபத்திரவப்படுத்துகிறது.

1Co_3:16-17, 2Co_6:16, 1Pe_4:17-18, Jer_25:29, Isa_66:6, Luk_19:41-46 , Jer_7:11-12, Amo_9:1,

7-21-1 தேவனுடைய வீட்டிலே நடைபெறும் தேவனுடைய முதல் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள ஆண்பிள்ளைகள் தங்களுடைய நெற்றியில் பெற்றுக்கொள்ளும் தேவ முத்திரையின் ஏழு அடையாளங்கள் :-

1. தேவனுடைய முதலாம் நியாயத்தீர்ப்பின் முதலாம் அடையாளம் பலிபீடத்தின் பிரமாணங்களை பின் பற்றி நடக்க வேண்டும்.
2. தேவனுடைய முதலாம் நியாயத்தீர்ப்பின் இரண்டாம் அடையாளம் புறஜாதிகளின் எந்த முறைகளையும் பின்பற்றக்கூடாது.
3. தேவனுடைய முதலாம் நியாயத்தீர்ப்பின் மூன்றாம் அடையாளம் கர்த்தருடைய பஸ்கா விருந்தை புசிக்க வேண்டும்.
4. தேவனுடைய முதலாம் நியாயத்தீர்ப்பின் நான்காம் அடையாளம் ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும்
5. தேவனுடைய முதலாம் நியாயத்தீர்ப்பின் ஐந்தாம் அடையாளம் மனச்சாட்சியின் பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டும்

6. தேவனுடைய முதலாம் நியாயத்திர்ப்பின் ஆறாம் அடையாளம் இயேசு கிறிஸ்துவின் சாட்சியை பின்பற்றி நடக்க வேண்டும்.
7. தேவனுடைய முதலாம் நியாயத்தீர்ப்பின் ஏழாம் அடையாளம் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவைகளைக் குறித்து மேலும் அறிய **இரண்டாம் தலைப்பு** தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்கள் 4-3-3-6 தேவனுடைய முதலாம் நியாயத்தீர்ப்பு :- என்கிற தலைப்பில் பார்க்கவும்

7-21-2 ஸ்திரியாகிய சபையிலிருந்து 1.44.000 ஆண்பிள்ளைகள் தேவனுடைய ஏழு முத்திரையின் அடையாயளங்களை பெற்றுக் கொள்ளுவதால் ஆண்பிள்ளைகள் பிறக்கிறது :-

தேவனுடைய வீட்டிலே துவங்கும் நித்திய நியாத்தீர்ப்பின் மூலம் தேவனுடைய ஏழு முத்திரைகளை தங்கள் நெற்றில் அடையாளங்களாகப் பெற்றுக்கொள்ளும் 1.44.000 ஆண் பிள்ளைகளை பெற்றெடுப்பதற்காக சபையானது பிரசவ வேதனையடைந்து வருத்தப்பட்டு அலறுகிறது. 1Pe_4:16-18, Rev_12:1-2, Rom_8:19-22,

தேவனுடைய வீட்டிலே நித்திய நியாயத்தீர்பை துவங்கு வதற்காக, எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய் அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளின் நிமித்தம் தங்கள் இருத யத்தில் பெருமூச்சு விட்டழுகிறவர்களின் நெற்றியில்; தேவனுடைய முத்திரை அடையாளங்களைப் போட்டு, அவர்களின் நடுவிலிருந்து ஆண் பிள்ளைகளை பிரித்தெடுப்பதற்காக பரிசுத்த ஸ்தலத்திலுள்ள மூப்பர்களிடத்திலிருந்து சங்காரம் செய்யத் துவங்கினார்கள். Eze_9:1-11, Eze_11:1-13, Jer_25:29, Isa 66:6-10

7-21-3 ஆண்பிள்ளைகளை இனம் கண்டறிதல் :-

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்த அடையாளங்களை போல, தேவனுடைய முத்திரை அடையாளத்தின் வசனங்களின் தேவ

அறிவை, ஒருவனுடைய சரீரமாகிய கூடாரத்தில் வாசம் பண்ணும் தலைச்சன் பிள்ளையாகிய ஜென்ம சுபாவ மனிதன் தரித்திருக்கும் போது அவன் இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம் செய்து கொண்ட இரட்சிப்பின் உடன்படிக்கை மரணம் அடையாமல் ஜீவ னோடியிருக்கும்.

தேவ முத்திரையின் அடையாளத்தை ஒருவனுடைய ஜென்ம சுபாவ மனிதன் தரித்திருக்கும்போது அவன் முதற்பலனாக / ஆண் பிள்ளையாக / தலைச்சன் பிள்ளையாக பிரித்தெடுக்கப்படுகிறான் இப்படி பிரித்தெடுக்கப்பட்டவர்கள் தேவ சித்தத்தை நிறை வேற்றுவதின் மூலம் கிறிஸ்துவின் மணவாட்டி சபையாக மாறு கிறார்கள்.

தேவனுடைய முத்திரை அடையாத்தின் தேவ அறிவை கீழே குறிப்பிட்ட நான்கு வழிமுறைகளில் ஏற்றுக்கொள்ளுபவர்கள் எகிப் தின் வாதைகளிலிருந்து காக்கப்படுவது போல ஆவி ஆத்துமாவில் தேவன் அனுப்பும் நியாயத்தீர்ப்பின் மூலம் உண்டாகும் சாபங் களிலிருந்து காக்கப்படுகிறார்கள்.

1. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவை தங்கள் அறிவிலும், செயலிலும், எதிர்த்து நிற்காமல் ஏற்றுக்கொண்டு நடைமுறைபடுத்துகிறவர்கள்.

2. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவை ஏற்கனவே கொஞ்சம் அறிந்தவர்கள், மேலும் முழுமையாக தேவ அறிவை அறிந்து கொண்டு நடைமுறை படுத்துகிறவர்கள்.

3. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறி வினால் இயன்றளவு நற்கிரியைகள் செய்துகொண்டு, மேலும் தேவ அறிவை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சியோடு போராடு கிறவர்கள்

4. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவினால் நற்கிரியைகள் செய்வதற்காக நல் மனம் உள்ளவர்களாக யிருந்து, நற்கிரியைகள் செய்து முன்னேறுவது; மேலும் தங்களைப்

போல உள்ளவர்களுடன் இணைந்து, கிறிஸ்துவின் சரீர அவயவங்களாக நற்கிரியைகளை செய்து தேவ சித்ததை நிறை வேற்றுகிறவர்கள்.

மோசேயின் மூலமாக அறிவிக்கப்பட்ட தேவவார்த்தை களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்ப்படிந்து எகிப்தின் பத்து வாதை களிலிருந்து காக்கப்பட்டது போல; மேலே குறிப்பிட்ட இந்த நான்கு வகையான ஜனங்கள் தேவ சித்தத்தை நிறைவேற்றும் போது ஆவி. ஆத்துமாவில் தேவன் அனுப்பும் நியாயத்தீர்ப்பின் மூலம் உண்டாகும் சாபங்களிலிருந்து காக்கப்படுகிறார்கள். Rev_9:1-4, Rev_7:1-4, Rev_7:13-14,

7-21-4 தேவனுடைய முத்திரையின் அறிவை ஏற்றுக் கொள்ளாத வர்களுக்கு தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்பு :-

தேவனால் முன் குறிக்கப்பட்ட 1,44,000 ஆண் பிள்ளைகள் நாங்கள் தான் என்று யார்? உரிமை கொண்டாடாடினாலும், அல்லது யார்? 1,44,000 ஆண்பிள்ளைகள் வரிசையில் சேர்ந்து கொள்ள விரும்பினாலும், அவர்கள் தேவனுடைய ஏழு முத்திரையின் அடையாளமாகிய தேவ வார்த்தையின் தேவ அறிவை பெற்று இருக்கிறார்களா? என்று தயவு செய்து பரிசோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும்; ஏனென்றால் தேவ முத்திரையின் அறிவை சரியாக புரிந்து கொள்ளாமல் அல்லது அறியாதிருக்கும்போது, தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்பின் தண்டனையை அடைய நேரிடும்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்த அடையாளங்கள் இல்லாத வீட்டில் தலைச்சன் பிள்ளை மரணமடைந்தது போல, தேவ முத்திரை யின் தேவ அறிவை ஏற்றுக்கொள்ளாத தலைச்சன் பிள்ளையாகிய ஜென்ம சுபாவ மனிதனுடைய கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கை யில் இரட்சிப்பு மரணமடையும்; தேவ முத்திரையின் அறிவை ஏற்றுக்கொள்ளும்போது மீண்டும் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக்கொள்ள அநேக வாய்ப்புகள் உள்ளது.

ஒருவன் தேவனுடைய ஏழு முத்திரையின் அடையாள மாகிய தேவ அறிவை ஏற்றுக்கொள்ளாமல் தன்னுடைய சுய விசுவா சத்தை நிலை நிறுத்தும்படியாக மனிதனுடைய அறிவில் முயற்சி செய்யும் போது; அவனுடைய அறியாமையினால் மிருகமாகிய அந்திக் கிறிஸ்த்துவின் முத்திரை அடையாளங்களை தங்கள் நெற்றியிலும், வலது கையிலும் பெற்றுக்கொண்டு அந்திக் கிறிஸ்துவின் மண வாட்டி சபையாக மாறி, தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களுக்கும், அவைகளை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் விரோதமாக அறிவிலும் கிரியைகளிலும், செயல்படுவதால் அந்திக் கிறிஸ்துக்கள் மற்றும் கள்ள தீர்க்கதரிசிகள் ஆகிய இவர்களுடன் நேரடியாக அக்கினி நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

தேவனால் முன் குறிக்கப்பட்ட 1.44.000 ஆண்பிள்ளைகளாகிய மணவாட்டி சபை நாங்கள் என்று உரிமை கொண்டாடுகிற தேவ ஜனமாகிய சீயோன் குமாரத்தியே! உனக்கு கிடைத்த இந்த நாளிலாவது சமாதானத்திற்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் உனக்கு நலமாயிருக்கும்; முதற்பலனாக / ஆண் பிள்ளையாக / தலைச்சன் பிள்ளையாக 1.44.000 வரிசையில் சேரவிரும்புகிறவர்கள் தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவை சாந்தமாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

இந்த தீர்க்க தரிசன தேவ வார்த்தைகளை வாசிக்கிறவன் கேட்கிறவன் இவைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள் Rev_1:2-3,

ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன் ; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன். Rev_22:14-17,

**Rev 22:18** இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் தேவன் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும்

கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார்.

**Rev 22:19** ஒருவன் இந்த தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப்புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்.

7-21-5 ஆண் பிள்ளைகளின் விசுவாச நற்கிரியைகள்:-

Rev_14:1-5 , Rom_7:1-6, 2Th_2:7-12, 2Co_11:2,

1. இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் உறுதியாக நிலைத்திருப்பவர்கள்.

2. பிதாவின் நாமமான தேவ வார்த்தையை தங்கள் ஆவியில் ஏற்றுக்கொண்டவர்கள்.

3. இயேசு கிறிஸ்துவின் சாட்சியை பின்பற்றுகிறவர்கள்.

4. தேவனுடைய சத்தியமான வார்த்தைகளிலே கபடமும் கள்ளத் தீர்க்க தரிசனமும் இல்லாமல், தேவனுடைய வார்த்தையை சாட்சியாக அறிவிக்கிறவர்கள்.

5. ஸ்திரியாகிய சபையினால் தங்களை கறை படுத்திக் கொள்ளாதவர்கள்.

6. அந்திக் கிறிஸ்துவின் சொருபத்தையும் அதன் அறிவையும் ஏற்றுக்கொள்ளாதவர்கள்.

7. மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் கற்றுக் கொண்டு தேவ சுரமண்டலத்தோடு பாடக்குடியவர்கள்.

8. தேவனுடைய வார்த்தைகள், இயேசு கிறிஸ்துவைபற்றிய சாட்சி ஆகிய இவைகளின் தீர்க்கதரிசனங்களை வாசித்தும் கேட்டும்,

இவைகளை கைக்கொண்டு பாக்கியவான்காளாக மாறுகிறவர்கள். Rev_1:2-3,

9. தேவனுடைய வார்த்தை, இயேசு கிறிஸ்துவை பற்றின சாட்சி ஆகிய இவைகளின் தீர்க்கதரிசன வசனங்களில் காத்திருந்து ஏழு சபைகளின் தேவதரிசனத்தைப் பெற்று ஆவியில் மருரூபம் அடைந்திருப்பவர்கள். Rev_1:9-11,

10. தேவனுடைய சத்தியமான வார்த்தைகள், இயேசு கிறிஸ்துவை பற்றிய சாட்சி ஆகிய இவைகளின் தீர்க்க தரிசன வசனங் களை புசித்து கிறிஸ்துவை தங்களுடைய இராஜாவாக அங்கிகரித்து அல்லேலூயா; என்று கெம்பீர சத்தமிடுகிறவர்கள் Rev_19:7-10

11. தேவனுடைய கற்பனைகளை பின்பற்றி அவருடன் செய்து கொண்ட விசுவாச உடன்படிக்கையில் உறுதியோடு பொறு மையாக காத்திருப்பவர்கள் மிருகத்தின் முத்திரையை தங்கள் நெற்றி யிலும் வலது கையில் தரித்துக் கொள்ளாலும், மிருகத்தின் சொருபத்தை வணங்காமலும் இருந்து தங்களை காத்துக் கொள்ளுகிற வர்கள். Rev_14:9-13,

12. தேவனுடைய சத்தியமான வார்த்தைகள், இயேசு கிறிஸ் துவை பற்றிய சாட்சி ஆகிய இவைகளின் தீர்க்க தரிசன வசனங்களை தங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி சாத்தானை ஜெயிப்பவர்கள். Rev_12:7-12,

13. தேவனுடைய சத்தியமான வார்த்தைகள், இயேசு கிறிஸ் துவை பற்றிய சாட்சி ஆகிய இவைகளின் தீர்க்க தரிசன வசனங்களை பின்பற்றி 1.44.000 எண்ணிக்கையில் வருகிறவர்களுடன் வலுசர்ப்பம் 42 மாதம் யுத்தம் செய்தது. இந்த யுத்தத்தில் சிரச்சேதம் பன்னப்படுவது அல்லது மரணத்தை காணமல் உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவது, தங்கள் விசுவாசத்திற்கும் பொறுமைக்கும் ஏற்றபடி மாறுபடுகிறது. Rev_12:13-17, Rev_13:7-10

14. தேவ வசனத்தின் நிமித்தமும் இயேசு கிறிஸ்துவின் சாட்சியை பின்பற்றின தினாலும் கொல்லப்பட்ட ஆத்துமாக்கள் பலி பீடத்தின் கீழ் வந்து சேர்வார்கள். அவர்களுக்கு வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டு சிறிது காலம் இளைப்பாரிக் கொண்டு இருப்பார்கள். Rev_12:13-17, Rev_13:7-10

15. தேவ வசனத்தின் நிமித்தமும் இயேசுகிறிஸ்துவின் சாட்சியை பின்பற்றி, மிருகத்தின் முத்திரையை தரித்துக் கொள்ளாமல் மரித்தவர்கள், அல்லது கொல்லப்பட்ட ஆத்துமாக்கள் முதலாம் உயிர்தெழுதலில் பங்கடைந்து கிறிஸ்துவுடன் ஆயிரம் வருடம் அரசாளுவார்கள். Rev_20:4-6,

7-22-1 தேவனுடைய ஏழு முத்திரைகளை தங்களுடைய நெற்றியிலே / அறிவிலே பெற்றுக் கொண்ட சீயோன் குமாரர்கள் / குமாரத்திகள் தங்களுடைய இருதய சுரமண்டலங்களை வாசித்து கெம்பீர சந்தத்தோடு பாடும் சீயோனின் கீதங்கள்.

இவைகளைக் குறித்து மேலும் அறிய தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள் அத்தியாயம் நான்கு என்கிற தலைப்பில் பார்க்கவும்:-

7-22-2 தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்க்கர்கள் தங்கள் ஆவியின் முறிவினாலே புலம்பி பாடும் புலம்பலின் பாடல்கள்.

இவைகளைக் குறித்து மேலும் அறிய தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள் அத்தியாயம் ஐந்து என்கிற தலைப்பில் பார்க்கவும்:-

# முடிவுரை

மனச் சாட்சியின் மூலம் தேவனை அறிந்தவர்கள் அவருக்கு துதி, கனம், மகிமை ஆகியவைகளை செலுத்தி ஆவியில் பிழைப் பார்கள். Rom_1:17-21, Gal_3:10-12, Eze_20:11, Rom_10:6, Lev_18:5,

மனச்சாட்சி மூலம் தேவனோடு தொடர்பு கொள்ளும் வழி முறைகளிலிருந்து திசை மாறி, தேவனுக்கு துதி, கனம், மகிமை செலுத்தாதவர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் சொல்லப்படட் எல்லா சாபங்களும் வந்து அவர்களுக்கு பலிக்கும். Rom_1:22-32Eph_4:17-19,

தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவர்கள் மற்றும் தேவனுடைய சித்த்தை விட்டு வழிவிலகுகிறவர்கள் வஞ்சிக் கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் அடிமைப்பட்டு தேவ ஆசீர்வாதங்களை இழக்கிறார்கள். 1Ti_4:1-9, 2Ti_2:7-19,

வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைபாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.

நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவி கொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ, நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள். ஆகையால் ஜாதிகளே கேளுங்கள்; சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்து கொள். பூமியே, கேள்; இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளா மலிருந்து, என் நியாயப்பிரமாணத்திற்குச் செவிகொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்; அவர்கள் மேல் நான் அவர்கள் நினைவு களின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன். Jer_6:16-19,

இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் மூலம் தேவனுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை பெற்றவர்களின் மூன்று நிலைகள்.

1-0 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

2-0 தேடுகிறவர்கள்

3-0 மற்றவர்கள் Rom_11:7,

1-0. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் :-

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவ நீதியை அடைந்திருக்கிறார்கள். 1Co_8:3, 2Co_16:9, 2Ti_2:10, 2Ti_2:19, Tit_1:3, Rom_8:28-33, Rom_9:6-30 ,Joh_6:39

2-0. தேடுகிறவர்கள் :-

தேவ நீதியை தேடுகிறவர்கள் கிழே குறிப்பிடுகிற பல காரணங்களினால் ஆவிக்குரியவைகளில் இடறி விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

1. தேவ நீதியைத் தேடாமல் தங்கள் சுய நீதியை நிலை நிறுத்த முயற்சி செய்தல். Mat_6:33 Rom_10:1-3,

2. நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளின் மூலம் நீதிப் பிரமாணத்தை தேடுவது. Rom_9:31-33,Gal_5:4-6,

3. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடாமல், பரலோகத்தில் வாசல் கதவுகளை தொடர்ந்து தட்டிக்கொண்டிருப்பது. Luk_13:23-30,

4. தேவனுடைய சித்தத்தை செய்யாமல் தங்களது தேவைகள் சந்திக்கப்பட்ட தேவனிடம் கேட்பது. Mat_7:22-23, Isa_1:10-15,

5. முதலாவது தேவனுடைய நீதியைத்தேடாமல் தங்கள் சுய விருப்பங்களை தேடி அவைகளை அடையும் படி தேவனை நோக்கி

கேட்பது. 1pe_2:6-8, Rom_9:32-33, Isa_8:11-16, Isa_28:14-15, Mat_21:44, Luk_20:18, Jer_5:1-5,

6. மூலைக்கல்லில் இடறுவதற்கு அறியாமைதான் மூலக்காரணம் ஏனென்றால் அவர்கள் தேவ அறிவை வெறுத்தார்கள். Hos_4:6, 1Sa_5:13-14, Mal_2:1-9, Jer_23:22, Mat_22:29, Mar_12:24, 1Co_8:1-2, Ecc_1:18, Ecc_12:12,

7. ஆவிக்குரிய வாழ்க்கையில் நற்கிரியைகள் இல்லாத பொழுது அறியாமையின் ஆழத்திற்கு செல்வது. Gal_5:6, Jam_2:17-26, Mat_25:24-30, Luk_19:20-27, Mat_22:9-14,

8. இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் உடன் படிக்கையின் மூலம் நற்கிரியைகள் செய்யும் போது அவைகள் எந்த ஒரு மனிதனையும் எந்த சூழ்நிலையிலும் தேவ நிதியை அடைய வழி நடத்தும்.

3-0 மற்றவர்கள் :- Rom_11:8-10, Psa_69:21-28, Act_1:16-20, 1Pe_2:1, 1Pe_3:1, Jud_1:1,

சூதும் வஞ்சகமுமான தந்திரமுள்ள போதகமாகிய பல விதமான காற்றுகளைப் பின்பற்றாமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, தேவன் ஒவ்வொரு அவயவங்களுக்கும் பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப் பிரமாணத்தில் நிலைத்திருந்து, முழு சரீர வளர்ச்சியை ஏற்படுத்தி தேவ சித்தத்தை நிறைவேற்றுவதினால் தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள முடியும் Eph_4:14-16,

இரு மனமாகிய சந்தேக காற்றை பின்பற்றாமல் ஒரு மனமாகயிருந்து முழு விசுவாசத்துடன் நற்கிரியைகள் செய்து தேவ ஞானத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியும் Jam_1:5-8, Jud_1:12,

இந்த நாள் வரைக்கும் காட்டுக் கழுதைகள் போல தங்கள் மதவெறியின் போதகத்தை பின்பற்றி தன் இச்சையாக திரிந்து கொண்டிருப்பவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமாவில், அறிவு,

புத்தி, ஞானம், இவைகளைக் கொடுத்து, தங்களை வழி நடத்துகிற உன்னதமான தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அன்புடன் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். Jer_2:24, Jer_14:6, Hos_8:9, Job_39:5-8,

இந்நாள் வரைக்கும் இவர்கள் தேவ நீதிக்கு கீழ்ப்படியாமல் தங்கள் மனதை கடினப்படுத்தியிருக்கிறார்கள், இவர்கள் நியாத் தீர்ப்புக்கு தப்புவதில்லை இவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து எப்பொழுது தீமை செய்வதிலிருந்து மனந்திரும்பு கிறார்களோ அப்பொழுது அவர்கள் மீண்டும் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும். ஆமென். Jer_2:24, Jer_14:6, Hos_8:9, Job_39:5-8.



இந்து முறைப்படி பூசாரி வம்சத்தில் பிறந்து பெற்றோர் என் சிறுவயதிலே மரணமடைந்ததால், வறுமையின் காரணமாக கோவையில் உள்ள ஒரு அநாதை இல்லத்தில் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டு, கடந்த முப்பது வருடங்களாக தேவ வார்த்தைகளைக் கண்டு, கேட்டு, உணர்ந்துகொண்டபடியால் ; பரலோக இராஜ்ஜி யத்தின் உவமைகளின் இரகசியங்களின் நன்மை தீமைகளை பகுத்தறிவதின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை புசித்து ஆவி, ஆத்துமாவில் மறுரூபடைந்தேன்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகங்களின் தலைப்புகள்

**1. பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருக்கிறது**

**2. தேவனுடைய வீட்டிலே நியாயத்தீர்ப்பு துவங்குகிறது**

**3 தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி**

**4. கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களை புசிக்கும் மூன்றுவகையான ஜனங்கள்**

**5. ஆவி,ஆத்துமாவின் மறுபிறப்பும் சரீரத்தின் உயிர்தெழுதலும்**

**6. நித்திய ஜீவ வார்த்தைகளினால் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து**

**7. தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்கள்**

**8. தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்**

**9. பூமியின் நான்கு திசைகளிலிருந்து நான்கு வகையான விசுவாசங்கள்**

**10. இந்த மனுஷகுமாரன் யார்?**

**11. ஆவிக்குரிய இஸ்ரவேலர்களின்/யூதர்களின் அடையாளங்கள்**

**12 . தேவனும் மனிதனும் கேட்ட எட்டு கேள்விகள்**

இந்த தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு இந்த புஸ்தகத்தில் புசிக்க ஏற்றபடி / அவரவர் உட்கொள்ளும் அளவுக்கேற்றபடி / தன்மைக்கேற்றபடி பரிமாறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள். ஆனால் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் ஒரு சிலர் இயேசு கிறிஸ்து ராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை பல ருசியுள்ள தேவ வார்த்தைகளின் தலைப்புகளாக புசித்து, அதன் சுவைகளை உணர்ந்து கொண்டபடியால், ஆவி, ஆத்துமாவில் மறுரூபமடைந்து, தங்களுக்கு கொடுத்த தேவ சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் ஜெயங்கொள்கிறவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டு பரலோக இராஜ்ஜியத்தின் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கும் மணவாளனாகிய கிறிஸ்துவுடன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.